விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 23.04.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 143 | பக்கங்கள் : 16



# மிருசுவிலில் 8 பேரை கழுத்தறுத்து கொன்றவரை விடுவித்தது தவறு!

## பாராளுமன்றில் கூறினார் சரத் பொன்சேகா

கொழும்பு, ஏப். 23

யாழ்ப்பாணம் - மிருசுவிலில் சிறுவன் உட்பட அப்பாவி பொது மக்கள் 8 பேரை படுகொலை செய்த கொலையாளியான சுனில் ரத்நாயக் கவுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியமை ஏற்றுக் கொள்ள முடியாத தவறு என்று பாராளு மன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், சுனில் உள்ளிட்ட இராணுவ சிப்பாய்கள் மிருசுவிலில் 8 பேரை கொலை செய்து, கழுத்தை அறுத்து

15

# மீண்டும் முடக்கமா? இறுதி முடிவு இன்று!

## கொரோனா தொற்று நிலை மிகத் தீவிரம்

கொழும்பு, ஏப்ரல் 23

இலங்கையில் புதிதாக உருவாகியிருக்கும் கொரோனா அபாய நிலைமையையடுத்து, நாடளாவிய ரீதியிலோ அல்லது சில பகுதிகளையோ மூடுவது குறித்து இன்று இறுதி முடிவு எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

15

# ஆபத்து கட்டத்தில் இலங்கை!

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 23

தமிழ் - சிங்களப் புத்தாண்டு பண்டிகை காலங்களில் சுகாதார வழிகாட்டுதல்களை பொதுமக்கள் கடைப்பிடிக்காத தன் விளைவாக இலங்கையின் கொரோனா வைரஸ் நிலைமை ஆபத்தான கட்டத்தில் இருப்பதாக சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

சுகாதார சேவைகளின் துணை பணிப்

15

# சிறைச்சாலையில் ஐவர் உட்பட யாழில் 16 பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஏப்.23

யாழ்ப்பாணத்தில் மேலும் 16 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று வியாழக்கிழமை உறுதி செய்யப்பட்டது என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

15

# இலங்கை வருகிறார் சீன பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஏப். 23

சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வீ பெங் 3 நாள் உத்தியோகபூர்வ பயணமாக இலங்கை வருகின்றார்.

எதிர்வரும் 27 ஆம் திகதி இலங்கை வரும் அவர் 29ஆம் திகதி வரை

15

# மே தின நிகழ்வுகளுக்குத் தடை பின்னணியில் அரச சூழ்ச்சியா?

## நிராகரிக்கிறது பொதுஜன பெரமுன

கொழும்பு, ஏப். 23

அரச கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள முறுகல்நிலை காரணமாகவே மே தின நிகழ்வுகள் இரத்து செய்யப்பட்டுள்ளன என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை அரச கூட்டணியின் தலைமைக்கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுன நிராகரித்துள்ளது.

நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ்

15

# தமிழ் இளையோரை பொலிஸில் இணைப்பதில் அரசு அர்ப்பணிப்பு

## யாழில் கூறினார் அஜித் ரோஹண

யாழ்ப்பாணம்,ஏப்.23

வடக்கு மாகாணத்தின் பொலிஸ் நிலையங்களுக்கு தமிழ் இளைஞர், யுவதிகளை இணைத்துக் கொள்வதற்கு பொலிஸ் தலைமையகம் அர்ப்பணிப்புடனான சேவையை எதிர்காலத்தில் வழங்கும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப்

15

# முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் யாழ். பல்கலையில் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் மீளவும் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில்

15

# துணைவேந்தருக்கு மாரடைப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, நேற்று ஏற்பட்ட இருதய

15



# முதியவர்களை அச்சுறுத்தி கொள்ளையிட்ட குழு கைது!

## யாழ்ப்பாண பொலிஸார் அதிரடி!!

யாழ்ப்பாணம், ஏப். 23

முதியவர்கள் வசிக்கும் வீட்டை குறிவைத்து புகுந்து, அவர்களை வாள் முனையில் அச்சுறுத்தி கொள்ளையடித்த கும்பலின் பிரதான நபரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதானவரிடம் இருந்து 18 பவுண் தங்க

15

# இரசாயனத்துடன் வந்த சீனக் கப்பல் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்!

## வெளிநாட்டு இராணுவம் இலங்கை வந்து சென்றாலும் இதே நிலையே என்று எள்ளி நகையாடுகிறது எதிர்க்கட்சி



கொழும்பு, ஏப்.23

அணுசக்திக்கு பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருள்கள் அடங்கிய கப்பல் இலங்கையின் கடற்பரப்புக்குள் நுழைந்து துறைமுகத்துக்கு வரும் வரை அதனை யாரும் அறிந்திருக்கவில்லை.

இவ்வாறானதொரு கப்பல் வருகை தந்து நாட்டில் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டாலும் இதே நிலைமையே காணப்படும். தேசிய பாதுகாப்பு எந்தளவுக்கு அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது என்பதற்கு இந்தச் சம்பவம்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிருசுவிலில்...

புதைத்தனர். இந்தக் குற்றத்துக்காக நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட சுனில் ரத்நாயக்கவிற்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியது தவறு. நீங்கள் எவ்வாறு அத்தகைய செயல்களை அங்கீகரிப்பீர்கள்? எனவும் சரத் பொன்சேகா கேள்வி எழுப்பினார்.

கொலைகாரன் கொலைகாரன்தான். பிரேமாவதி மனம்பேரியை கொன்றதும் இராணுவ சிப்பாயே. அவர் தூக்கு மேடைக்கு அனுப்பப்பட்டார். குற்றமிழைத்தவர்களை விடுதலை செய்துவிட்டு இராணுவ வீரர்களை விடுவிக்கின்றோம் என நீங்கள் கொடி தூக்க முடியாது.

மரண தண்டனை கைதியாக தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் எம்.பி. துமிந்த சில்வாவை விடுதலை செய்யவும் அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

ஒரு மரண தண்டனை கைதியை விடுதலை செய்ய சில பொறிமுறைகள் உள்ளன. இங்கு அவை பின்பற்றப்படவில்லை. ஜனாதிபதி பின் கதவால் தீர்மானங்களை எடுக்கின்றார். மரண தண்டனை கைதியை விடுதலை செய்யச் சிறைச்சாலைகள் ஆணையாளர் பரிந்துரை முன்வைக்க வேண்டும். பின்னர் ஓய்வுபெற்ற சட்டமா அதிபர் அடங்கிய குழுவை நியமிக்க வேண்டும். பெரும் குற்றம் செய்தவர் தொடர்பில் ஜனாதிபதிக்கு சமூக பொறுப்பு இருக்க வேண்டும்.

நன்னடத்தை தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும். ஆனால், இவை இங்கு பின்பற்றப்படவில்லை - என்றார்.

இதேவேளை, கொலைக் குற்றவாளியான இராணுவ சிப்பாய் ரத்நாயக்கவை விடுவித்தது பிழை என பகிரங்கமாக ஒப்புக்கொண்டு பேசியதற்காக அவரது உரை முடிந்ததும் பாராளுமன்றத்தில் இருந்த தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி. எம்.ஏ. சுமந்திரன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் ஆகியோர் அவரது அருகில் சென்று கைலாகு கொடுத்து பாராட்டினர்.

## முள்ளிவாய்க்கால்...

நிர்மாணிக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவு தூபி கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி இரவு, பல்கலைக்கழக நிர்வாகத்தினால் உடைக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து மாணவர்கள், தமிழ் உணர்வாளர்கள் அரசியல் தலைவர்கள் கண்டனம் வெளியிட்டதோடு பல்கலைக்கழக மாணவர்கள் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் குதித்தனர்.

மாணவர்களின் கடும் அழுத்தத்தை அடுத்து மீண்டும் நினைவுத் தூபியை அதே இடத்தில் அமைப்பதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் முன்வந்தது.

இதையடுத்து கடந்த ஜனவரி 11 ஆம் திகதி அதிகாலை, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி எஸ். சிறிசற்குணராசா தலைமையில் அடிக்கல் நாட்டப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தரின் அனுமதிக்கு அமைய, அடிக்கல் நாட்டப்பட்டதை தொடர்ந்து, மாணவர்களால் நினைவுத் தூபி கட்டுமானம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றாக மீள அமைக்கும் பணி நிறைவுக்கு வந்த நிலையில் இன்று காலை திறந்து வைக்கப்படுகிறது.

இன்று காலை 7.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி எஸ். சிறிசற்குணராசா வினால் திறந்து வைக்கப்பட ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், துணைவேந்தருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டதை அடுத்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இருந்தபோதிலும் குறித்த நேரத்தில் ஏற்பாடு செய்தவாறு முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் இன்று திறந்து வைக்கப்படும் என மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாங்கள் இந்த கருத்தை சொல்வதை விட, முன்னாள் இராணுவ தளபதி ஒருவர் இவ்விதம் சொல்வது சிங்கள மக்களை சிந்திக்க தூண்டும் என நாம் நினைக்கின்றோம் என இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (ஐ)

## முதியவர்களை...

நகைகள், பணம், வாள்கள் என்பன கைப்பற்றப்பட்டன. அத்துடன், கொள்ளையிட்ட நகைகளை வாங்கிய - விற்பனை செய்த - அடைவு பிடித்த குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் முன்னெடுத்த விஷேட நடவடிக்கையிலேயே இந்தக் கைது இடம்பெற்றது.

அண்மையில், புன்னாலைக்கட்டுவனில் பூசகர் ஒருவரின் சமையலறையின் புகைக்கூண்டு ஊடாக நுழைந்த கொள்ளையர்கள் வாள்களை காட்டி அச்சுறுத்தி நகை மற்றும் பணத்தை கொள்ளையிட்டு தப்பிச் சென்றனர். இந்தக் கொள்ளை தவிர, கந்தரோடை, நல்லூர், கந்தர்மடம் ஆகிய இடங்களில் முதியவர்களை அச்சுறுத்தி கொள்ளையிட்ட கும்பலின் பிரதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைதானவர் நல்லூரை சேர்ந்த 22 வயது இளைஞர் என்று தெரிய வந்துள்ளது. அவரிடமிருந்து நகைககளை வாங்கிய - விற்பனை செய்த - அடைவு வைத்தவர்களும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் பொலிஸ் விசாரணையில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

## துணைவேந்தருக்கு...

அடைப்புக் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலை இருதய சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களால் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நினைவுத்தூபியை இன்று காலை 7.30 மணியளவில் திறந்து வைக்க இருந்த நிலையில் நேற்று அவர் மாரடைப்பினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அவருக்கு ஏற்பட்ட திடீர் மாரடைப்பு தொடர்பில் இருதய குருதிக் குழாய் மருத்துவ சோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதுதொடர்பான பரிசோதனையின் பின்பே இருதய சத்திர சிகிச்சை அல்லது உறைகுழாய் (Stent) வைப்பது தொடர்பில் முடிவு எடுக்கப்படும் என்று மருத்துவ வல்லுநர்கள் அறிக்கையிட்டுள்ளனர்.

நீரிழிவு நோய் கட்டுப்பாட்டை கவனிக்காமல் அவர் விட்டதனால் இந்த நிலை ஏற்பட வாய்ப்புள்ளதாக மருத்துவ வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நேற்று மாலை திடீரென வயிற்று வலி ஏற்படுவதாகத் தெரிவித்த பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, இரவு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அதன்போதே அவருக்கு இருதய அடைப்பு ஏற்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது.

பேராசிரியர் சி.சிறிசற்குணராசாவின் மருத்துவ சோதனைகள் மற்றும் சிகிச்சைகளை இருதய சிகிச்சை வல்லுநர்கள் லக்ஸ்மன், குருபரன் இணைந்து கண்காணித்து வருகின்றனர். (அ-3)

## மீண்டும்...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இன்று விசேட கலந்துரையாடல் நடைபெறவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கலந்துரையாடலில் வைத்திய நிபுணர்கள், பாதுகாப்பு அதிகாரிகள், அமைச்சர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொள்வார்கள்.

தற்போதைய சூழ்நிலையில் நாடு மூடப்படாவிட்டால் நிலைமை மோசமடையக்கூடும் என்று நிபுணர்கள் ஏற்கனவே எச்சரித்துள்ளனர்.

அதன்படி, எழுப்பப்பட்ட பிரச்னைகள் குறித்து விவாதித்து ஜனாதிபதி இன்று இறுதி முடிவு எடுக்க உள்ளார்.

## இலங்கை...

நாட்டில் தங்கியிருப்பார். இதன்போது ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட நாட்டின் முக்கியஸ்தர்களுடன் பேச்சுகளை நடத்தவுள்ளார் என்று தெரிய வருகின்றது.

கொழும்பு துறைமுக நகரம் தொடர்பில் நாட்டின் அரசியலில் பெரும் பரபரப்பு நிலவுகின்றது. அதேசமயம் சீனாவுக்கு எதிராக நாட்டில் கருத்துக்கள் மேலோங்குகின்றன. இந்நிலையில் சீனாவுக்கு கொழும்பு துறைமுக நகரத்தை வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து 20 மனுக்கள் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நடக்கிறது. இந்நிலையில் இவரின் வருகை பெரும் முக்கியத்துவம் பெறுகின்றது.

இதனிடையே, கடந்த 6 மாத காலப் பகுதியில் சீனாவிலிருந்து இலங்கை வரும் உயர்மட்ட அமைச்சர் இவராவார். முன்னதாக, கடந்த ஒக்ரோபர் மாதம் சீனாவின் மூத்த தலைவரும் வெளியுறவு கொள்கை அதிகாரியுமான யாங் ஜீச்சி தலைமையிலான குழு இலங்கை வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சிறைச்சாலையில்...

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடம் என்பவற்றில் 396 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போதே 16 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டது.

இதில், யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். இவர்கள் 4 பேரும் சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர்கள்.

இதேவேளை, யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 5 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட மூவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர்களில் இருவர் சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர்கள். ஒருவர் அரச திணைக்களம் ஒன்றில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் கைதடியைச் சேர்ந்தவர்.

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர் சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர் என்றும் மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்தார். (எ-03)

## இரசாயனத்துடன்...

சிறந்த உதாரணமாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம்.மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

தேசிய பாதுகாப்பை ஸ்திரப்படுத்துவதாகக் கூறியே இந்த அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால், அணுசக்திக்குப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருள்கள் அடங்கிய கப்பல் அனுமதியின்றி அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருகை தந்தது.

இந்தக் கப்பல் இலங்கைக் கடல் எல்லைக்குள் பிரவேசித்து அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வரும் வரை அதிகாரிகள் உறங்கிக் கொண்டிருந்தார்களா?

இவ்வாறானதொரு கப்பல் துறைமுகத்துக்குள் வரும் வரை அது பற்றி அறியாமல் இருக்கின்றோம் என்றால், வெளிநாட்டு இராணுவம் நாட்டுக்கு வந்து சென்றாலும் இதே நிலைமையல்லவா ஏற்படும்? அவ்வாறெனில் தேசிய பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்பதற்கு சிறந்த உதாரணம் இந்தக் கப்பல் நாட்டுக்கு வந்து சென்றமையாகும்- என்றார். (அ-எ)

## மே தின நிகழ்வு...

பரவும் அபாயம் இருப்பதால் இம்முறை மேதினக் கூட்டங்களை நடத்துவதற்கு அனுமதி வழங்குவதில்லை என கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் அரச தரப்புக்குள் ஏற்பட்டுள்ள மோதலை தடுப்பதற்கும், அரசியல் குழப்பங்களை மறைப்பதற்காகவுமே மே தினத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என சில எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இது தொடர்பில் வினவியபோதே பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார்.

"கொரோனா வைரஸ் தாக்கத்தால் தேர்தல்கூட பிற்போடப்பட்டது. எனவே, மே தினம் குறித்து சுகாதார தரப்பினரே முடிவெடுத்துள்ளனர். கட்சி என்ற அடிப்படையில் மே தின நிகழ்வுகளை நடத்துவதற்கு நாமும் தயார். ஆனாலும் அரசு என்ற வகையில் பொறுப்புடன் செயற்பட வேண்டும். ஏனெனில் அண்டை நாடான இந்தியாவில் தற்போது வைரஸ் தொற்று வேகமாக பரவி வருகின்றது." - என்றார்.

## தமிழ் இளை...

பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதனூடாக தமிழ் பேசும் இளைஞர், யுவதிகள் பொலிஸ் நிலையத்தில் முழுமையான பங்களிப்பை வழங்க எதிர்காலத்தில் ஒன்றிணைவது காலத்தின் கட்டாயமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் சேவைக்கான ஆளணியை அதிகரிப்பது தொடர்பில் யாழில் நேற்று இடம்பெற்ற செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுதந்திரமான, ஜனநாயக ரீதியான நாட்டில் இன ஐக்கியத்தையும் சமூக ரீதியான வலுவான கட்டமைப்பை உருவாக்க எதிர்பார்த்துள்ளோம்.

அத்துடன், கடந்த சில ஆண்டுகளில் பத்தாயிரம் இளைஞர், யுவதிகளை பொலிஸ் சேவையில் இணைத்துக் கொண்டதாகவும், எதிர்வரும் 2023ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் மேலும் 24 ஆயிரம் பேரை சேவையில் இணைக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், தமிழ் மொழியில் இணைத்துக் கொள்பவர்கள், விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த தமது சொந்த மாவட்டங்களிலே பணிபுரிய வழியேற்படுத்தப்படும்-என்றார். (அ-எ)

## ஆபத்து கட்டத்தில்...

பாளர் நாயகம் வைத்தியர் எஸ்.எம். அர்னால்ட் நேற்று பிற்பகல் சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பில் பேசுகையில்-

புதுவருடத்தை தொடர்ந்து தொற்றாளர்களின் எண்ணிக்கையில் கணிசமான அதிகரிப்பு காணப்படுகின்றது.

சுகாதார உத்தரவுகளை புறக்கணித்து கடந்த இரண்டு வாரங்களில் பொதுமக்கள் அதிக எண்ணிக்கையில் கூடிவந்தனர், அதன் விளைவுகள் தற்போது காணப்படுகின்றன.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த பல நாடுகள் முயற்சி எடுத்த போதிலும், இரண்டாவது மற்றும் மூன்றாவது அலை பரவல் அங்கு ஏற்பட்டது. அயல் நாடான இந்தியா ஒரு எடுத்துக்காட்டு.

இந்த மாத தொடக்கத்தில் வைரஸை கடுமையாக கட்டுப்படுத்திய போதிலும், இந்தியா அதிக தினசரி வழக்குகளை பதிவு செய்து வருகிறது.

இதேபோன்ற நிலைமை இலங்கையிலும் ஏற்படலாம். இதே போன்று நிகழாமல் இருக்க பொதுமக்கள் பொறுப்பேற்குமாறு கேட்டுக்கொண்டார்.

இந்த காலகட்டத்தை ஒரு இடைக்கால கட்டம் என்று அவர் குறிப்பிட்டார். இந்த காலகட்டத்தில் அறிகுறியற்ற தொற்றாளர்கள் சமுதாயத்தில் தொற்றை அதிகரிக்கும்.

எதிர்காலத்தில் நிகழ்வுகளுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது...!

உடுப்பிட்டி தேர்தல் தொகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தோல்வி குறித்து இந்தப் பத்தியில் எழுதியிருந்தோம்.ஒரு நண்பர் இதுகுறித்து என்னுடன் தர்க்கத்திற்கு வந்துவிட்டார். அவர் எப்போதும் இதுபோல அந்த அரசியல்வாதியைப் பற்றி ஏதேனும் எழுதினால் என்னோடு மல்லுக்கட்ட வந்துவிடுகிறார்.

உடுப்பிட்டி தொகுதியில், அதுவும் பிரபாகரனின் சொந்தத் தொகுதியில் கூட்டமைப்பின் தோல்விக்கு, அந்தப் பேட்டியும் காரணமாக இருக்கலாம் என்று எழுதியிருந்தேன்.

விடுதலைப் புலிகளையோ அல்லது அவர்களின் ஆயுதப் போராட்டத்தையோ தான் ஆதரிக்கவில்லை என்று சிங்கள இணையத்தளம் ஒன்றுக்கு சுமந்திரன் வழங்கிய சர்ச்சைக்குரிய அந்தப் பேட்டி கூட்டமைப்பிற்கு ஏற்பட்ட தோல்விக்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்பது பலரின் கணிப்பாக இருந்தது.

விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டதாக நம்பப்படுகின்ற ஓர் அரசியல் இயக்கத்தின் பேச்சாளராக இருக்கின்ற ஒருவர், எந்த அரசியல் கட்சி விடுதலைப் புலிகளையே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு அரசியல் நடத்தியதோ அந்த அரசியல் கட்சியின் பேச்சாளர், புலிகளையோ அவர்களின் போராட்டத்தையோ தான் ஆதரிக்கவில்லை என்றால், அது எந்த வகையில் செல்வாக்குச் செலுத்தும் என்பது தெரிந்ததே.

இந்தப் பத்தியில் இதுபற்றி எழுதியதைப் படித்த அந்த நண்பர், அதுதான் காரணம் என்றால், அந்த மக்கள் எப்படி சிறிலங்கா சுதந்திரக் கட்சியை அதுவும் ஒரு தேசியக் கட்சியின் வேட்பாளருக்கு வாக்களித்தார்கள்? அதுவே காரணம் என்றால், இன்றைக்கும் புலிகளின் பிரதிநிதிகளாகத் தங்களையே காட்டிக் கொண்டிருக்கும் கஜேந்திரகுமார் அணியினர் அல்லவா வென்றிருக்க வேண்டும்? நீங்கள் வேண்டுமென்று சுமந்திரன் மீது பழியைப் போடுவதற்காக இப்படி எழுதக்கூடாது என்பது அவரது வாதமாக இருந்தது.

உண்மைதான். அவரது கேள்வியிலும் ஒரு 'லொஜிக்' இருக்கத்தான் செய்கிறது.

ஆனால், கடந்த தேர்தலில் முதல்தடவையாக வாக்களித்தவர்கள், அதாவது புதிதாக வாக்காளர்களாக இணைந்து கொண்டவர்களுக்கு வயது பதினெட்டு அல்லது பத்தொன்பது.

விடுதலைப் புலிகளின் போராட்டம் மௌனிக்கப்பட்டபோது அவர்கள் எட்டு வயதுச் சிறுவர்கள். அவர்கள் பிரபாகரன் என்றொருவர் பற்றி சிறிது அறிந்திருக்கலாம். ஆனால், அவர்களைப் பொறுத்தவரை அவர் ஒரு தமிழ் அரசியல் போராளி. கடந்த தேர்தலில் அந்தத் தொகுதியில் வெற்றி பெற்றவர், சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்டிருந்தாலும், அந்தப் புதியவர்களைப் பொறுத்தவரை, அது 'அங்கஜன் கட்சி'தான்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பது தமிழ் மக்களை அரசியல் அநாதைகளாக்கிய பிரதான கட்சிகளில் ஒன்று என்பதோ, அதிகம் ஏன்? யுத்தத்தை நிறைவு செய்தபோது மஹிந்த ராஜபக்ஷகூட அந்தக் கட்சியின் தலைவர்தான் என்பதோ தெரிந்திருக்குமோ தெரியவில்லை.

அண்மையில், ஒரு பேட்டி ஒன்றில், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரான சி. வி. விக்னேஸ்வரன், தனக்கு வாக்களிப்பதாக நினைத்துக்கொண்டு பலர் கூட்டமைப்பில் தனது இலக்கமான ஆறாம் இலக்கத்திற்கு வாக்களித்ததாக சொன்னார்கள் என்றார்.

அதனை அவர் ஏன் சொன்னார் என்பது தெரியவில்லை. ஆனால், தமிழ் மக்கள் இப்படித்தான் அரசியலை அறிந்து வைத்திருக்கின்றனர் என்பதற்கு அது ஒரு சான்று.

கூட்டமைப்புக்கு வாக்களித்த அந்தப் பழசுகளுக்கே அரசியல் இவ்வளவுதான் என்றால், புதிதாக வாக்களிக்க வந்தவர்களின் அரசியல் அறிவு பற்றி நாம் அதிகம் பேச வேண்டியதில்லை.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட சுதந்திரக் கட்சி வேட்பாளர் ஒருவரே, தனது கட்சியின் பெயரைக் குறிப்பிடும்போது, அங்கஜன் கட்சி என்றுதான் குறிப்பிட்டிருந்தார். இப்படியிருக்கையில் வாக்காளர்களின் நிலை?

அதைவிட முக்கியமானது, அவர்களின் தேர்தல் பிரசாரங்களில் எழுச்சிப் பாடல்களை ஒலிபரப்பியமை, மேடைகளில் ஏதோ ஒரு வகையில் புலிகளைப் பற்றிப் பிரஸ்தாபித்தமை என்பவற்றிற்கும் அப்பால், உருவ ஒற்றுமைகூட அவர்களுக்கு உதவியிருக்கலாம்.

ஆக, உடுப்பிட்டியில் கூட்டமைப்பின் தோல்விக்கு காணம் வேறு எதுவுமாக இருக்கமுடியுமோ தெரியவில்லை. ஆனாலும், கூட்டமைப்பும் அதன் வேட்பாளரும் அங்கே தோல்வியடைந்தார்கள் என்பது மட்டும் உண்மை!

**- ஊர்க்குருவி.**

# உடற்பயிற்சி நிலையங்களை நடத்த அனுமதிப் பத்திரம் அத்தியாவசியம்

## அமைச்சர் நாமல் தெரிவிப்பு



கொழும்பு,ஏப்.23

**விளையாட்டு அரங்கு, உடற்பயிற்சி மத்திய நிலையங்களை பதிவு செய்வதற்கும், நடத்துவதற்கும் அனுமதிப் பத்திரத்தை வழங்குவது அத்தியாவசியமாகும் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

இதுவரையில் இந்த மத்திய நிலையங்களை ஆரம்பித்து நடத்துவது தொடர்பில் அரசாங்கத்தால் எந்தவித வழிகாட்டிகளும் அறிவிக்கப்படவில்லை என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

'சௌபாக்கிய தொலைநோக்கு' தேசிய கொள்கையின் கீழ் ஆரோக்கியமான இளைஞர் சமூகத்தை உருவாக்குவதே இதனடிப்படை நோக்கமாகும் என்றும், இதனை புதிய தொழில்துறையாக அடையாளம் காணமுடியும் என்றும் அமைச்சர் கூறினார். இளம் சமூகத்தினருக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்க இதன்மூலம் முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கமைய விளையாட்டுத்துறை சட்ட விதிகள் தொடர்பில் கவனம் செலுத்தி விளையாட்டு அரங்கு மற்றும் உடற்பயிற்சி மத்திய நிலையங்களுக்கான ஆலோசனைகள் வழிகாட்டி துரிதமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் கூறினார்.

பயனாளிகளுக்குத் தேவையான வசதிகளின் கீழ் முறையான சேவையை வழங்குதல் அளவு மற்றும் வழங்கப்படும் கால எல்லைக்குள் அதனைப் பயன்படுத்தக்கூடிய வகையில் ஆகக்கூடியவர்களை அடிப்படையாகக் கொண்டு விளையாட்டு அரங்கு உடற்பயிற்சி மத்திய நிலையப் பொருள்கள் உலக விளையாட்டு அரங்கு மற்றும் உடற்பயிற்சி மத்திய நிலையம் மற்றும் திறந்தவெளி விளையாட்டு அரங்கு தொடர்பில் தனித்தனியான ரீதியில் கவனத்தில் கொள்ளுதல் இதன்கீழ் இடம்பெறும்.

தனியாகப் பயிற்சிகளை மேற்கொள்ளக்கூடிய மற்றும் பயிற்றுவிப்பாளர்களின் ஒத்துழைப்பை வழங்கும் வகையில் மத்திய நிலையங்கள் தொடர்பாகவும் தனித்தனியான ரீதியில் கவனத்தில் கொள்ளுதல் என்ற விடயங்களை ஒழுங்குறுத்தப்பட வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ் பரவலைத் தவிர்ப்பதற்காக சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள ஆலோசனைக்கு அமைவாக இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் விளையாட்டுத்துறை அமைச்சர் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கேட்டுக்கொண்டுள்ளார். (எ)

### கொழும்பு துறைமுக நகரம்:
## மனுக்கள் மீதான விசாரணை இன்று வரை மீள ஒத்திவைப்பு

கொழும்பு,ஏப்.23

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுக்கள் மீதான விசாரணை மீண்டும் இன்று வரை ஒத்திவைக்கப்பட்டது. இந்த மனுக்கள் தொடர்பான மேலதிக விசாரணைகள் நேற்று நான்காவது நாளாக உயர்நீதிமன்றில் இடம்பெற்றது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜெயசூரிய, புவனேக அலுவிஹாரே, பிரியந்த ஜெயவர்த்தன, முர்து பெர்னாண்டோ மற்றும் ஜனக் டி சில்வா ஆகிய ஐவர் அடங்கிய உயர்நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த மனுக்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது குறித்த மனுக்கள் மீதான மேலதிக விசாரணைகளை இன்று காலை 10 மணிவரையில் நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன, அந்தக்கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க, இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம், மாற்றுக் கொள்கைக்கான நிலையம், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார, தகவல் தொழில்நுட்ப தொழில்சங்க கூட்டமைப்பின் தலைவரான பொறியியலாளர் ஜீ. கபில ரேணுக பெரேரா உள்ளிட்ட தரப்பினர்களால் சுமார் 20 மனுக்கள் இவ்வாறு தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (எ)

## தந்தை செலுத்திய ஓட்டோவில் சிக்கி குழந்தை பரிதாபமாக பலி

கொழும்பு,ஏப்.23

தந்தை செலுத்திய ஓட்டோவில் சிக்குண்ட ஒன்றரை வயது ஆண் குழந்தையொன்று சம்பவ இடத்திலேயே பலியான சம்பவம் பிபிலைப் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

பிபிலைப் பகுதியின் நன்னபுராவ என்ற இடத்தைச் சேர்ந்த டி.எம். சேனுல சேகான் என்ற ஒன்றரை வயது நிரம்பிய ஆண் குழந்தையே இவ்வாறு பலியாகியது.

குறித்த குழந்தையின் தந்தை செலுத்திய ஓட்டோ சில்லில், மேற்படி குழந்தை சிக்குண்டதையடுத்து, உடனடியாக அக்குழந்தை பிபிலை அரசினர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. குழந்தையைப் பரிசோதித்த மருத்துவர்கள், அக்குழந்தை ஏற்கனவே இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர். இது குறித்து விசாரணைகளை மேற்கொண்ட மெதகமை பொலிஸார், ஓட்டோவை செலுத்திய குறித்த குழந்தையின் தந்தையை கைது செய்ததுடன், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## 216 பேர் பூரண குணமடைவு

கொழும்பு,ஏப்.23

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களில் மேலும் 216 பேர் நேற்றுப் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பினர்.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனா தொற்றிலிருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 93 ஆயிரத்து 884 ஆக அதிகரித்தது.

மேலும், இலங்கையில் இதுவரையில் 98 ஆயிரத்து 50 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை இலங்கையில் 630 ஆக அதிகரித்தது.(எ)

கல்வி TV CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
23.04.2021 வெள்ளிக்கிழமை
சார்வரி, சித்திரை 10

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

## மாகாண சபைக்கான ரெலோவின் அழைப்பு

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), மாகாண சபையை பாதுகாப்பதற்கு அனைத்து கட்சிகளும் ஒன்றுபடவேண்டுமென்று அழைப்பு விடுத்திருக்கின்றது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சி, வெளிப்படையாக மாகாண சபையை பாதுகாப்பதற்கு அணிதிரளுமாறு அழைப்பு விடுத்திருப்பது இதுவே முதல் தடவையாகும். ஏனெனில், 2009இற்கு பின்னர் இடம்பெற்ற எந்தவொரு தேர்தல்களின் போதும், மாகாண சபையை அரசியல் தீர்வுக்கான அடிப்படையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் எவருமே குறிப்பிட்டதில்லை. 2009இற்கு முன்னரான நிலைமை வேறு. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் ரெலோ மேற்படி அழைப்பை விடுத்திருக்கின்றது.

இவ்வாறானதோர் அழைப்பை கோரவேண்டியளவிற்கு அரசியல் சூழ்நிலை மாறியிருக்கின்றது. 1987 இந்திய - இலங்கை ஒப்பந்ததத்தின்கீழ் சட்டமாக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான அரசியல் தீர்வை, இந்தியா கடந்த 34 வருடங்களாக வலியுறுத்தி வருகின்றது. அண்மையில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத் தொடரின்போது, இலங்கை தொடர்பில் மிகவும் தெளிவான நிலைப்பாட்டை இந்தியா வெளிப்படுத்தியிருந்தது. ஈழத் தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகளை ஏற்றுக்கொள்ளும் இந்தியா, அதன் எல்லையாக 13ஆவது திருத்தச் சட்டத்தையே தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது.

இதற்கு பின்னால் இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, 13ஆவது திருத்தச் சட்டம், இந்தியாவின் நேரடித் தலையீட்டின் விளைவாக வந்த ஒன்றாக இருப்பது. அடுத்தது, இந்தியாவில் மாநிலங்களுக்காக பகிரப்பட்டிருக்கும் அதிகாரப் பகிர்வு முறைமைக்கு ஒப்பானதாக இருப்பது. ஏனெனில், இலங்கையின் மாகாண சபை முறைமை என்பது, இந்திய அரசியல் சாசனத்தில், இந்தியாவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் அதிகாரப் பகிர்வு முறைமைக்கு ஒப்பானது. உண்மையில், அதன் பிரதிதான் இலங்கையின் மாகாண சபை முறைமை. எனவே, இந்தியா இதனைத் தாண்டி ஒருபோதும் பயணிக்காது. அவ்வாறு தாண்டிச் செல்வதானால், அது இலங்கையில் சிங்கள பெரும்பான்மையின் இணக்கப்பாட்டுடன்தான் இடம்பெறமுடியும். ஆனால், அவ்வாறானதோர் இணக்கப்பாட்டை எட்டுவதில், இதுவரையில் இலங்கைத் தீவை மாறிமாறி ஆட்சி செய்த அரசாங்கங்கள் எவையுமே வெற்றி பெறவில்லை. இவ்வாறானதொரு சூழலில்தான் மாகாண சபை ஒன்றே தமிழர்களுக்கு முன்னால் இருக்கின்றது.

அண்மைக் காலத்தில் பிறிதொரு மாற்றமும் ஏற்பட்டிருக்கின்றது. அதவாது, இதுவரையில் பிராந்திய சக்தியான இந்தியாவினால் மட்டும் வலியுறுத்தப்பட்டுவந்த விடயம், தற்போது சர்வதேச அரங்குகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாக மாறியிருக்கின்றது. ஐ. நா. மனித உரிமைகள் பேரவையினால் நிறைவேற்றப்பட்டிருக்கும் தீர்மானங்களிலும் 13ஆவது திருத்தச் சட்டமே அரசியல் தீர்வின் அடிப்படையாக வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. இதன்மூலம், அரசியல் தீர்வுக்கான அடிப்படையாக 13ஆவது திருத்தச்சட்டமே அத்திபாரமாக இனம்காணப்பட்டிருக்கின்றது. இதன் பின்னரும் 13இல் ஒன்றுமில்லை, 13ஐக் கடந்து செல்லப்போகின்றோம் என்று கூறிக் கொண்டிருப்பதானது, தமிழ் மக்களை ஏமாற்றும் செயலாகவே அமையும்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், ரெலோவின் அழைப்பு காலப்பொருத்தம் கருதிய ஒன்றுதான். இதனை அனைத்து கட்சிகளும் ஏற்றுக்கொண்டு ஓரணியில் பயணிப்பதே தமிழ் மக்களுக்கு நன்மையான ஒன்றாக இருக்கமுடியும். மாகாண சபையை தாண்டியும் அரசியலதிகாரத்தை பெற முடிந்தால், அது நல்லது - ஆனால், அது எப்போது நிகழுமென்பதை எவரும் அறியார். ஏனெனில், அது தமிழர்களின் கெட்டித்தனத்தால், பலத்தால் நிகழக்கூடிய ஒன்றல்ல.

# ‘கண்ணுக்கு கண் என்றால் முழு உலகுமே குருடாகிவிடும்’

- அலசுவது **இராஜதந்திரி** -



இயேசு பிரானின் அவதாரம், கொடூரம் நிறைந்த உலகில் மன்னிப்பதன் மூலமே மனித மாண்பினை வெளிப்படுத்தமுடியும் என்ற உயர்ந்த தத்துவத்தை வெளிப்படுத்துவதாக இருக்கின்றது. சிலுவையில் கொடூரமான முறையில் கைகள், கால்கள், உடம்பில் ஆணிகள் அறையப்பட்டு, தலையில் முள் கிரீடம் சூட்டப்பபட்டு கொலைசெய்யப்பட்ட போதிலும், தம்மை இம்சைப்படுத்தியவர்களை மன்னித்துவிடுமாறு இறைவனிடம் மன்றாடுகின்றார் தேவமைந்தன் இயேசு பிரான்.

**இறை செய்தி**

இறை தூதரின் இந்த உயர்வான வேண்டுதலை உலகுக்கு எடுத்தியம்பி, மன்னிப்பதன் மகிமையை வெளிப்படுத்தும் தினமாகவே உயிர்த்த ஞாயிறு தினம் விளங்குகின்றது. எனவே, இரு வருடங்களுக்கு முன்னர் ஏககாலத்தில் கொழும்பு கொச்சிக்கடை தேவாலயம் , நீர்கொழும்பு தேவாலயம் மற்றும் மட்டக்களப்பு தேவாலயம் என்பவற்றில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டு தாக்குதல்கள் மூன்று இடங்களிலும் தற்கொலைக்குண்டுதாரிகள் உட்பட, மொத்தம் 300 பேரைப் பலியெடுத்திருந்தன. தேவாலயங்களில் மட்டுமல்ல. கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் இரண்டிலும் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்றிருந்தன.

இரண்டு வருடங்களானபோதிலும் இதுவரை இத் தாக்குதல்களின் பின்னணியில் இருந்த எவரையும் கண்டறிந்து சட்டத்தின் முன்பாக நிறுத்தாது அரசு இருந்து வருவதை இலங்கையின் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் குறிப்பிட்டுள்ள அதேசமயம், உலகளாவிய கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸ்கூட மன்னிப்பதன் இன்றியமையாமையை தெளிவுறக் குறிப்பிட்டுள்ளதுடன் பழிவாங்குவதனால் எவ்வித பயனுமில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

**காந்தியின் போதனை**

அரசியலில்கூட தெய்வீக அணுகுமுறையைக் கொண்டிருந்த மகாத்மா காந்தி அடிகள், ‘கண்ணுக்கு கண் என்று பகைமை பாராட்டினால் முழு உலகுமே குருடாகிவிடும்’ என்று குறிப்பட்டிருந்தார். இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பேராயர் மல்கம் ரஞ்சித் நேற்று முன்தினம் இடம்பெற்ற இலங்கையின் உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு சம்பவத்தின் இரண்டாவது ஆண்டு பூர்த்தி பற்றி குறிப்பிடுகையில், உயிர்த்த ஞாயிறு குற்றவாளிகளுடன் தொடர்புடையவர்களை பாதுகாக்க ஓர் அரசியல் சக்தி பின்னணியல் இயங்குகின்றது என்பதையும் துணிச்சலோடு குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், உலக கத்தோலிக்கர்களின் தலைவரான பரிசுத்த பாப்பரசர் மற்றும் இலங்கையின் பேராயர் ஆகியோர் விடுத்துள்ள செய்திகள், இலங்கை பௌத்த மதத்தவர்களையே பெரும்பான்மையானவர்களாக கொண்டுள்ள நாடாக இருக்கின்ற போதிலும், கத்தோலிக்க மத போதனைகூட பல்லின, பலமதங்களைக்கொண்ட இலங்கையில் எவ்வளவு தூரம் அழகுற இழையோடியிருக்கின்றதென்பதையே எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றது. ஒரே நாளில் அதுவும், ஓர் உலகப்பிரசித்தி பெற்ற புனித நாளில், இந்தியா முன்கூட்டியே வழங்கிய எச்சரிக்கையைக்கூட புறக்கணித்த நிலையில் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் இலங்கையில் இடம்பெற்றுள்ளனவென்ற விடயம் இலங்கையின் பாதுகாப்புத்துறை, அதனோடிணைந்த புலனாய்வுத்துறை என்பவற்றை கேலிக்கூத்தாக்கியுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

**வடக்கு - கிழக்கு மக்களுக்கு நீதி கிடைக்குமா?**

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு இரண்டாம் ஆண்டு பூர்த்தியுற்ற தினத்தில் பாராளுமன்றம்கூட களேபரமடைந்திருந்ததையே காணமுடிந்தது. ஏதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கறுப்பு பட்டிகளை அணிந்தவர்களாக பாராளுமன்றத்தினுள்ளே ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தனர். இதன் காரணமாக சபை நடவடிக்கைகள்கூட பத்து நிமிடங்கள்வரை இடைநிறுத்தப்பட்டிருந்தன. இதேவேளை, உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலின் இரண்டாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு கொழும்பு, நீர்கொழும்பு மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களில் கடும் பாதுகாப்பு அமுல்படுத்தப்பட்டிருந்தது. பொதுமக்கள் மிக எச்சரிக்கையுடன் நடந்துகொண்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

இருந்தபோதிலும், மூன்று தசாப்த கால கொடிய வடக்கு-கிழக்கு யுத்தம் இடம்பெற்ற காலங்களில்கூட இடம்பெற்றிராத வகையில் நிகழ்ந்த மிக கொடூரமான தாக்குதலாகவே இருவருடங்களுக்கு முன்னர் இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் விளங்குகின்றன. எனவே, பரிசுத்த பாப்பரசர் மற்றும் இலங்கையின் பேராயர் போன்ற அதி உயர் ஆன்மீகத் தலைவர்களே இரு வருடங்களின் பின்னரும் உயிர்த்த ஞாயிறு அவலம் குறித்து நீதிவேண்டி நிற்கின்ற நிலையில், வடக்கு-கிழக்கின் யுத்த அனர்த்தங்களால் அல்லலுற்று நீதி வேண்டி நிற்கின்ற மக்களுக்கு இலகுவில் நீதி கிடைத்துவிடுமா? என்பது முக்கிய கேள்வியாகவே இருக்கின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு






**மேடம்**
பொது வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவர்களின் மதிப்பு கூடும் வாக்குவன்மை கூடும். முயற்சியால் சிலருக்கு உயர்வு வரும். வெளியூரில் வேலை கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**இடபம்**
திருமணம் போன்ற சுப விஷயங்களில் முன்னேற்றம் வரும். உங்களின் கோரிக்கை பற்றி மேலதிகாரியிடம் பேச உகந்த நாள். காதல் முயற்சிகள் கைகூடி வரும். பெற்றோரின் ஆசி பெறுவீர்கள்.

**மிதுனம்**
வருமானம் கூடப்போவது பற்றிய செய்திகள் இன்று வரும். சக ஊழியர்களுடன் ஒற்றுமை அதிகரிக்கும். நிம்மதி கூடும். இன்று சந்தோஷம் அதிகம் நிறைந்த நாளாக அமையும்.

**கடகம்**
சமீபகாலம் வரை மனதை அரித்த கவலை ஒன்று நீங்கும். குடும்பத்தில் ஒருவரது ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும். தந்தைக்கு தன வரவு உண்டாகும். பாராட்டுப் பெறுவீர்கள்.

**சிம்மம்**
பிள்ளைகள் மூலமாகப் புதிய நட்பு வரும். சுபச் செலவு ஏற்படும். உங்களின் வாக்கு வன்மை அதிகரிக்கும். சந்தோஷம் கூடி வரும். வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்லும் எண்ணம் ஏற்படும்.

**கன்னி**
முயற்சிக்கு வெற்றி கிடைக்கும். நல்ல செய்தி தேடி வரும். எதிர்பாலினத்தாரால் வந்த பிரச்னைகள் நீங்கும். நிம்மதி ஏற்படும். வாழ்க்கைத்துணையுடன் கலந்து பேசி நல்ல முடிவு எடுப்பீர்கள்.

**துலாம்**
காரசாரமான விவாதம் வரும்போது விட்டுக்கொடுத்து ஜெயிப்பீர்கள். பிள்ளைகள் உடல் ஆரோக்கியத்தில் இருந்து வந்த இடர் நீங்கும். குழந்தை பாக்கியம் இல்லாதோருக்கு நற்செய்தி உண்டு.

**விருட்சிகம்**
பிள்ளைகளை கண்காணிக்க வேண்டிய அவசியம் இல்லை. தேவையற்ற நட்பு வட்டாரங்களைத் தவிர்ப்பது மிகவும் நல்லது. பல முறை முயன்று நம்பிக்கை இழந்த விஷயம் இன்று கைகூடும்.

**தனுசு**
குடும்பச் சூழ்நிலை மகிழ்ச்சி தரும். பணிச்சுமை குறையும். உழைப்பை அதிகரிப்பீர்கள். வாழ்வில் வசதிகள் பெருகும். உங்களின் மதிப்பு கூடும். மனதில் உற்சாகம் ஏற்படும்.

**மகரம்**
புதிய திட்டங்களை நிறைவேற்ற முயற்சி செய்வீர்கள். உங்களின் பேச்சினால் புதிய பிரச்னை தேடி வரக்கூடும். மனம் சந்தோஷம் அடையும்படியான நிகழ்ச்சிகள் நடைபெறும்.

**கும்பம்**
பணியில் இருந்த மந்த நிலை மாறும். கோபம் குறையும். அலுவலகத்தில் பணிச்சுமை குறையும். புதுப் பயிற்சி கிடைக்கும். பதவி உயர்வோடு வேறு இடங்களுக்கு மாற்றல் கிடைக்கக்கூடும்.

**மீனம்**
வாழ்வின் சுக சவுகர்யங்களை அதிகரித்துக் கொள்வீர்கள். சிக்கல் ஏற்படுத்தும்படியான விவாதங்கள் செய்ய வேண்டாம். விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலமாக நற்பெயர் எடுப்பீர்கள்.

# புதுச்சேரியில் வார இறுதியில் ஊரடங்கு உத்தரவு நடைமுறை!

பாண்டிச்சேரி, ஏப். 23

புதுச்சேரி முழுவதும் வாரந்தோறும் வெள்ளி இரவு முதல் திங்கள் காலை வரை முழு ஊரடங்கு கட்டுப்பாட்டு அறிவிப்புகளை அரசு செயலாளர் வெளியிட்டுள்ளார். புதுச்சேரியில் கொரோனா பரவலை அடுத்து இந்த உத்தரவு நேற்று பிறப்பிக்கப்பட்டது.

"புதுச்சேரி, காரைக்கால், மாஹே, ஏனாம் ஆகிய நான்கு பிராந்தியங்களில் இரவு10 மணி முதல் காலை 5 மணி வரை இரவு நேர ஊரடங்கு அமுலில் உள்ளது. அதேபோல், இன்று தொடக்கம் வார இறுதி நாட்களில் சகல இடங்களிலும் ஊரடங்கு அமுலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மதம் சார்ந்த திருவிழாக்கள் நடத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆனால், புதுச்சேரியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்த ஊரடங்கு உத்தரவுக்கு அரசியல் கட்சிகளும், மக்களும் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன. (ஐ)



# சூழல்நேய அமைப்பாக மாறும் தேயிலை தொழிற்சாலைகள்!

நீலகிரி, ஏப். 23

சூழலியல் பாதுகாப்பின் முன் மாதிரியாக நீலகிரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் பசுமைத் தொழிற்சாலைகளாக உருமாறியுள்ளன.

இந்தியாவின் மிகப்பெரிய தேயிலைத் தொழில் கூட்டுறவு அமைப்பாக செயல்பட்டு வருகிறது 'இன்ட்கோசர்வ்' அமைப்பு. நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான சிறு மற்றும் குறு தேயிலை விவசாயிகள் இதில் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கின்றனர்.

ஆங்கிலேயர்களால் இம் மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பணப்பயிர்களில் ஒன்று தேயிலை. தேயிலை தூள் உற்பத்தி செய்யவும் அதிகளவு மரங்கள் விறகாக எரிக்கப்படுகின்றன. இதனால் மலைப்பகுதியின் பாரம்பரிய மரங்களும், புற்கள் இனங்களும் அழிந்து வருவதாக, சூழலியல் ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆனால், அரசு தேயிலைத் தோட்டங்கள் வனங்களை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, 'இன்ட்கோசர்வ்' கட்டுப்பாட்டில் இயங்கும் இரண்டு தேயிலைத் தொழிற்சாலைகள் மற்றும் அதன் வளாகத்தைச் சூழலியலோடு ஒத்த தன்மையுடன் மாற்றும் முன்மாதிரி பணியில் களமிறங்கியுள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள வன உயிரினங்களை பாதுகாப்பது குறித்து கட்டப்பெட்டு 'இன்ட்கோசர்வ்' தொழிற்சாலையை விரிவுபடுத்தி, அதன் வளாகம் பசுமையாக காட்சியளிக்க இயற்கை பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக பலரும் அந்த நிறுவனத்துக்கு பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றனர். (ஐ)

# ஒருநாளில் தமிழகத்தில் 12,652 பேருக்கு தொற்று

சென்னை, ஏப். 23

தமிழ்நாட்டில் நேற்று மாலை 6 வரையான 24 மணி நேரத்தில் 12 ஆயிரத்து 652 பேருக்கு தொற்று உறதி செய்யப்பட்டது.

இதனால், ஒட்டுமொத்த மாகப் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 10 இலட்சத்து 37 ஆயிரத்து 711 ஆக உயர்ந்துள்ளது.

இதில், சென்னையில் அதிகபட்சமாக 3,789 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேவேளை, இந்த 24 மணி நேரத்தில் 59 பேர் தொற்றால் பலியாகினர். இதனால், ஒட்டுமொத்த மரண எண்ணிக்கை 13 ஆயிரத்து 317ஆக உயர்ந்துள்ளது.

மேலும் 7526 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதுவரை மொத்தம் 9,34,966 பேர் நோய்த் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். தற்போது மருத்துவமனையில் 89,428 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ)

# கங்கைகொண்ட சோழபுர ஆய்வில் பானை, ஆணி, செப்பு காசுகள் மீட்பு

தஞ்சாவூர், ஏப். 23

கங்கைகொண்ட சோழபுரத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழாய்வு பணிகளில் தற்போது பானை ஓடுகள், ஆணிகள் மற்றும் செப்புக் காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

2020 - 21 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை மூலம் அகழாய்வு பணிகள் தமிழகம் முழுவதும் கீழடி, ஆதிச்சநல்லூர், கங்கை கொண்ட சோழபுரம் உள்ளிட்ட 7 இடங்களில் பணிகள் தொடங்கவுள்ளதாக அறிவித்திருந்தது.

இதன்படி, அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் அருகே கங்கை கொண்ட சோழபுரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் தமிழ்நாடு தொல்லியல் துறை மூலம், கடந்த ஜனவரி மாதம் ஆளில்லா சிறிய ரக விமானம் மூலம் கங்கைகொண்ட சோழபுரத்தை சுற்றியுள்ள பொன்னேரி, கல்குளம், ஆயுதக்களம், மண்மலை, மாளிகை மேடு உள்ளிட்ட 6 இடங்களில்



ஆய்வு செய்வதற்காக சுற்றியுள்ள 18 கிலோ மீற்றர் சுற்றளவில் சென்று தொழில்நுட்ப கருவிகள் மூலம் புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட இடங்களில் ஒன்றான மாளிகை மேட்டில் அகழ்வாராய்ச்சி செய்வதற்கான முன்னேற்பாடாக கடந்த பெப்ரவரி மாதத்தில் மண்டிகிடக்கும் புல் புதர்களை அகற்றி சுத்தம் செய்யும் பணி நடைபெற்றது. தொடர்ந்து, ராடர் கருவி மூலம் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதில், பத்துக்கு பத்து என்ற அளவில் குழிகள் தோண்டப்பட்டு, அந்த இடத்தில் பணி நடைபெறுகிறது. இப்பணியை மேலும் தீவிரப்படுத்தி அலுவலர்கள் செய்து வருகின்றனர். மேலும், அந்த இடத்தில் கிடைக்கப்பட்ட பானை ஓடுகள், கூரை ஓடுகள், ஆணி வகைகள் மேலும் செப்புக்காசு போன்றவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ். நகரை தொற்று நீக்கி, மருந்து விசிறியது இராணுவம்!

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ்ப்பாணம் நகரத்தின் பஜார் வீதியை நீரூற்றி கழுவி, கிருமி தொற்று நீக்கும் மருந்து விசிறும் செயல்பாட்டில் நேற்று இராணுவம் ஈடுபட்டது.யாழ். நகரப் பகுதியில் அண்மையில் அதிக தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். இதையடுத்து யாழ். நகரின் மத்திய பகுதி முடக்கப்பட்டது.

இந்நிலையில், தற்போது அந்தப் பகுதி வர்த்தக நடவடிக்கைக்காக படிப்படியாகத் திறக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், நேற்றுக் காலை இராணுவத்தின் 51ஆவது படையணியின் கட்டளை அதிகாரியின் வழிகாட்டலில் 512ஆவது படைப்பிரிவு அப்பகுதியை நீரூற்றி கழுவி கிருமி தொற்று நீக்கி தெளிக்கும் பணியில் ஈடுபட்டது.

இந்தப் பணியில், அந்தப் படையணியின் தளபதி, இராணுவத்தினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ஐ-3)

# கண்காணிப்பு வலயத்திலிருந்து பாரதிபுரம் இன்று விடுவிக்கப்படும்!

### யாழ். அரச அதிபர் அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப்.22

**அதிகளவு கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட திருநெல்வேலி பாரதிபுரம் இன்று வெள்ளிக்கிழமை தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படும் என்று மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்தார். இது தொடர்பில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.**

மேலும், கடந்த வாரமளவில் திருநெல்வேலியில் முடக்கப்பட்ட பாற்பண்ணை கிராமத்தில் பாரதிபுரம் தவிர்ந்த ஏனைய பகுதிகள் விடுவிக்கப்பட்டன.

இந்நிலையில், பாரதிபுரம் கிராமத்தை நாளை (இன்று) விடுவிப்பதற்கான நடவடிக்கைளை சுகாதாரப் பிரிவினர் எடுத்துள்ளனர். நேற்றுமுன்தினம் அப்பகுதியில் 97 பேரிடம் பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்பட்டது.இதில், மூன்று நபர்களுக்கு மாத்திரமே கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. ஏனையோருக்கு தொற்றில்லை இந்த நிலைமை திருப்தியாக உள்ளமையால் கண்காணிப்பு வலயத்தில் இருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது - என்றார். (ஐ-3)

### தொல்லியல் திணைக்கள வழக்கு:

# வலி.கிழக்கு தவிசாளர் பிணையில் விடுதலை

யாழ்ப்பாணம், ஏப். 23

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தொல்லியல் திணைக்களத்தின் அரச கருமங்களுக்குத் தடை ஏற்படுத்தினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றே பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என நீதிபதி பொலிஸாருக்கு அறிவுறுத்தியதுடன் தவிசாளர் ஒரு இலட்சம் ரூபா சொந்தப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

தொல்லியல் திணைக்களம் நிலாவரையில் மேற்கொள்ள இருந்த நடவடிக்கைக்கு தவிசாளர் தடை ஏற்படுத்தினார் என்றும் இதன் மூலம் அரச கருமத்திற்கு தடை ஏற்படுத்தினார் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு தொல்லியல் திணைக்களத்தின் முறைப்பாட்டுக்கமைய அச்சுவேலி பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிமன்றில் நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்றுமுன்தினம் மாலை எடுக்கொள்ளப்பட்டது.

இவ் வழக்கில், தவிசாளர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி வி. திருக்குமரன் தலைமையிலான சட்டத்தரணிகள் முன்னிலையாகினர்.

அவர்கள் தொல்லியல் திணைக்களத்தின் வர்த்தமானியில் நிலாவரைக் கிணறு என்றே அடையாளப் படுத்தப்பட்டுள்ளதாகவும் இக் கிணற்றில் இருந்து அப்பால் தான் தொல்லியல் திணைக்களத்தின் முயற்சி இடம்பெற்றுள்ளது. பிரதேச சபை தொடர்ச்சியாக குறித்த இடத்தினை அரச பெறுகை கேள்விகோரல் நடைமுறைகளின் பிரகாரம் குத்தகைக்கு வழங்கிவந்துள்ளது.

பொலிஸார் தாக்கல் செய்துள்ள குற்றவியல் சட்டக் கோவை சரத்தின் பிரகாரம் சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற்றே மேற்படி வழக்கின் குற்றப்பத்திரத்தினைத் தாக்கல் செய்திருக்க வேண்டும்.

நிலாவரையில் பிரதேச சபை பல முதலீடுகளைச் செய்துள்ளது. தொல்லியல் திணைக்களத்திற்கு பொறுப்பான அமைச்சரே மாவட்ட அபிவிருத்திக் குழுவின் அனுமதி பெற்றே தொல்லியல் திணைக்களம் செயல்படும் என உத்தரவாதமளித்துள்ளார்.

ஆனால், இங்கு பிரதேச சபை ஒன்றின் தவிசாளர் என்ன நடக்கிறது என்ற விவரத்தினைக் கேட்டால் அரச கருமத்திற்கு தடை ஏற்படுத்தினார் என்கின்றனர். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் தலைவர் என்ற வகையில் தவிசாளார் அங்கு என்ன நடக்கின்றது எனக் கேள்வி எழுப்பியமையை அரச கடமைக்கு தடை ஏற்படுத்தியதாகக் கருத முடியாது. நிர்வாக ரீதியாக இரு அரச நிறுவனங்களுக்கு இடையே எழும் பிரச்னையை குற்றவியல் சட்டக்கோவையின் பிரகாரம் அணுகமுடியாது எனவே இவ்வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிடப்பட்டது.

தனியாராக இருந்தாலென்ன அரச தாபனமாக இருந்தாலென்ன பிரதேச சபையின் அனுமதி பெற்றே எந்தக் கட்டுமானத்தினையும் செய்ய முடியும் என்பதும் சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்டது.

தொல்லியல் திணைக்களத்தின் முறைப்பாட்டின் அடிப்படையில் தாக்கல் செய்த அச்சுவேலிப் பொலிஸார் தாம் இவரை முதலாவது எதிராளியாகக் கொண்டு மேலும் பலருக்கு இவ்விடயத்தில் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகமன்றில் தெரிவித்தனர். அத்துடன் மன்றில் கடும் ஆட்சேபம் தெரிவித்தனர்.இந் நிலையில் நீதிபதி பொலிஸார் தாக்கல் செய்துள்ள குற்றவியல் சட்டக் கோவை சரத்தின் பிரகாரம் முதலாம் எதிராளியாக மன்றில் முன்னிலையாகியுள்ள வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளரை விசாரிப்பதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்றப்பட்டதாக எங்கும் வெளிப்படுத்தவில்லை.

அத்துடன் தொல்லியல் திணைக்களத்தின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கிணறு என்றே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்ததுடன் தொடர்ந்து இவ் வழக்கை நடத்துவதாயின் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று வழக்கைத் தொடருமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தினார். இதேவேளை, மன்றில் பிரசன்னமாகிய வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மேலதிக விசாரணைகள் ஏற்படின் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் ஒரு இலட்சம் ரூபா சொந்தப் பிணையில் செல்வதற்கும் உத்தரவிட்டார்.

## பொலிஸாருக்கு 'டிமிக்கி' விட்ட டிப்பர் ஆசிரியையை மோதிவிட்டு தப்பியது!

வடமராட்சி, ஏப். 22

பொலிஸாருக்கு டிமிக்கி விட்ட டிப்பர் வாகனம் ஆசிரியை ஒருவரை மோதி தள்ளி விட்டு தப்பிச் சென்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த ஆசிரியை யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நேற்று முன்தினம் வடமராட்சி திக்கம் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது:

வடமராட்சி திக்கம் பகுதியில் டிப்பர் ஒன்றை இரு மோட்டார் சைக்கிள்களில் பொலிஸார் விரட்டிச் சென்றுள்ளனர். ஒழுங்கைகளால் புகுந்து சென்று துரத்தி வந்த டிப்பர் பொலிஸாருக்கு டிமிக்கி காட்டியது.

இதன்போது, வளைவு ஒன்றில் எதிரே மோட்டார் சைக்கிளில் வந்த ஆசிரியையை மோதித் தள்ளி விட்டு தப்பிச் சென்றது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த ஆசிரியை உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக அவர் யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ஐ)

## பட்டப்பகலில் வானகத்தில் வந்து வீடுடைத்து திருட்டு!

தென்மராட்சி, ஏப். 22

பட்டப்பகலில் வாகனத்தில் வந்தவர்கள் வீடு ஒன்றிலிருந்து தையல் இயந்திரத்தை களவாடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தென்மராட்சி - வரணி பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் எவரும் இல்லாத சமயம் பார்த்து கெப் ரக வாகனத்தில் வந்தவர்கள் வீட்டிலிருந்த தையல் இயந்திரத்தை திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பில் விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, வரணிப் பகுதியில் அண்மைக்காலமாக சைக்கிள்கள், மாடுகள் ,வீட்டு உபகரணங்கள் எனப் பல தொடர்ச்சியாக திருடப்படுகின்றன என்று அப்பகுதியினர் தெரிவித்தனர்.(ஐ-3)

## மணல் கடத்திய டிராக்டர் மீது இராணுவத்தினர் துப்பாக்கி சூடு!

தென்மராட்சி, ஏப். 22

சட்டவிரோத மணல் ஏற்றி சென்ற உழவு இயந்திரத்தின் மீது இராணுவத்தினர் துப்பாக்கி சூடு நடத்தியுள்ளனர்.

கொடிகாமம் பாலாவி காட்டுப்பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 6.30 மணியளவில் இராணுவத்தினர் ரோந்தில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரம் ஒன்றை அவர்கள் வழிமறித்தனர்.

ஆனால், அவர்களின் கட்டளையை மீறி உழவு இயந்திரம் தப்பிச் செல்ல முற்பட்டது. இதையடுத்து வாகனத்தின் ரயர்களை இலக்கு வைத்து இராணுவத்தினர் துப்பாக்கி சூடு நடத்தினர் என்று கூறப்படுகின்றது.

இராணுவத்தினரின் துப்பாக்கி சூட்டால் ரயர் காற்று போக உழவு இயந்திரத்தில் பயணித்த மூவர் வாகனத்தை கைவிட்டு காட்டுக்குள் பாய்ந்து தப்பி சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை, அடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் உழவு இயந்திரத்தை கைப்பற்றினர். அத்துடன், தப்பிச் சென்றவர்களை கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைதுறைப்பற்று பிரதேச சபை மீண்டும் கூட்டமைப்பின் வசம்!

## ரெலோவின் விஜிந்தன் தவிசாளராக தெரிவு

முல்லைத்தீவு, ஏப். 23

**கரைதுறைப்பற்று பிரதேச சபையின் புதிய தலைவர் தெரிவு நேற்று இடம்பெற்ற நிலையில் புதிய தவிசாளராக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான கமலநாதன் விஜிந்தன் தெரிவாகியுள்ளார்.**



வட மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் இடம்பெற்ற அமர்வில் 22 உறுப்பினர்கள் பங்குபற்றியிருந்தனர். இரண்டு உறுப்பினர்கள் சபைக்கு சமுகமளிக்காத நிலையில் சுயேட்சைக் குழு உறுப்பினர்கள் இருவரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரும் ஆக மூன்று பேர் நடுநிலை வகித்தனர். இந்நிலையில் 19 பேர் வாக்குகளை பதிவு செய்தனர்

பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த ஒருவரும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை சேர்ந்த ஒருவருமாக 4 பேர் பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்ட அன்ரனி ரங்க துஷாரவுக்கு வாக்களித்தனர். ஏனைய கட்சிகளைச் சார்ந்த 15 உறுப்பினர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கமலநாதன் விஜிந்தனுக்கு வாக்களித்தனர்.

இதனடிப்படையில் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் புதிய தவிசாளராக கமலநாதன் விஜிந்தன் தெரிவு செய்யப்பட்டார். (ஐ)



# முழங்காவில் வயல் விழாவில் இயந்திரம் மூலம் நாற்று நடுகை!

கிளிநொச்சி, ஏப். 23

இயந்திரம் மூலம் நாற்று நடும் முன்மாதிரி வயல்விழா முழங்காவில் - கரியாலை நாகபடுவான் இடதுகரை கமக்காரர் பிரிவில் 12ஆம் வாய்க்கால் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது, மாகாண விவசாயத் திணைக்களத்தின் கீழ் இளம் விவசாயிகள் கழகத்திற்கென வழங்கப்பட்ட நாற்று நடும் இயந்திரம் மூலம் முன்மாதிரி விவசாயிகளான செ திருச்செல்வம், சி. ஜெயக்குமாரசிங்கம் ஆகியோரின் வயலில் நெல் நடுகை செய்யப்பட்டது.

முழங்காவில் விவசாயப் போதனாசிரியர் ம.மகிலன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், கிளிநொச்சி பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து மாவட்ட நெல் தொடர்பான பாடவிதான உத்தியோகத்தர் சு. ஜெயக்காந்தன், முழங்காவில் கமநல சேவைகள் நிலையத்தின் கமநல அபிவி ருத்தி உத்தியோகத்தர் க.கஜீபன், ஜெயபுரம் விவசாயப் போதனாசிரியர் அஜந்தன் மற்றும் சக விவசாயப் போதனாசிரியர்கள், விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், நாற்று நடுகையின் அவசியம், மற்றும் தொழில்நுட்பத் தகவல்கள் வழங்கப்பட்டன. இதில் தரமான விதை நெல்லை தரம் பிரிப்பதற்கான உப்பு நீர்ப்பரிகரணம் செய்முறையாக மேற்கொள்ளப்பட்டது. (ஐ)

# ரயிலுடன் விபத்து; ஒருவர் படுகாயம்!

வவுனியா, ஏப். 23

பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையை கடக்க முயன்ற ஒருவர் ரயில் மோதியதில் படுகாயமடைந்தார்.

வவுனியா - திருநாவல்குளத்தில் நேற்று காலை 6.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது. இதில், நிசாகரன் (வயது 40) என்பவர் காயமடைந்து வவுனியா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து இடம்பெற்ற பகுதியில் முன்பாக உள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையில் ரயில் வருவதை அவதானிக்க முடியாதமையால் அடிக்கடி விபத்துக்கள் இடம்பெறுகின்றன என்று கூறப்பட்டது.

# சட்டவிரோத கல் விற்பனையை தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை!



மன்னார், ஏப். 23

மன்னார் - தோட்டவெளி கிராமத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு தடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அப்பகுதியில் சட்டவிரோதமாக கல் அரிந்து விற்பனை செய்யப்படுவதாக அந்தக் கிராமத்தின் அபிவிருத்தி சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தப் பகுதியில் காடுகள் சட்டவிரோதமாக அழிக்கப்பட்டு மணல் அகழ்வு இடம்பெற்றது. பல போராட்டங்களுக்கு பின்னர் இப்பகுதியில் மண் அகழ்வு தடுக்கப்பட்டது. இந்த நிலையில் குறித்த காட்டுப்பகுதியில் தற்போது இரண்டு ஜாட் அமைக்கப்பட்டு மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு கல் அரிந்து வேறு இடங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யும் நடவடிக்கை இடம்பெறுவதாகக் கூறப்பட்டது.

இது விடயம் குறித்து நேற்று வியாழக்கிழமை குறித்த பகுதிக்கு சென்று கல் அரியும் செயல்பாடுகளை அவதானித்ததுடன், இந்த சட்டவிரோத செயலை நிறுத்துமாறும் வலியுறுத்தினர். ஆனால், இதனை அவர்கள் பொருட்படுத்தவில்லை என்று அபிவிருத்தி சங்கத்தினர் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில், மன்னார் மாவட்ட அரச அதிபர், மன்னார் பிரதேச செயலர் ஆகியோருக்கு தெரியப்படுத்தியதுடன், இந்த சட்டவிரோத செயலை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. (ஐ)



# கடுகதி ரயில் மோதி 16 எருமைகள் பலி!

வவுனியா, ஏப். 22

கடுகதி ரயிலில் மோதுண்டு 16 எருமை மாடுகள் உயிரிழந்தன.

வவுனியா ஓமந்தைப் பகுதியில் நேற்றுக் காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற ரயிலிலேயே இந்த எருமை மாடுகள் மோதுண்டு இறந்தன.

வவுனியா மாவட்டத்தில் மேய்ச்சல் தரை இன்மையால் பலரும் தமது மாடுகளை மேய்ச்சலுக்காக வேறு இடங்களுக்கு கொண்டு செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால், அவை வீதியோரங்கள், ரயில் தண்டவாளங்களுக்கு அருகில் இரை தேடுகின்றன.

இந்நிலையிலேயே இந்த எருமை மாடுகள் விபத்தில் சிக்கி உயிரிழந்தன. (ஐ)

# யானை தாக்கி ஒருவர் காயம்!

முல்லைத்தீவு, ஏப். 22

மின்சார வேலியை உடைத்து ஊருக்குள் நுழைந்த யானை தாக்கியதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு முல்லைத்தீவு - மாங்குளம் மணவாளன்பட்டமுறிப்பில் இடம்பெற்றுள்ளது.

மின்சார வேலியை உடைத்துக் கொண்டு நுழைந்த யானையை விரட்ட முனைந்த எஸ். சிவராசா என்பவர் காயமடைந்து மாங்குளம் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில், பல பகுதிகளிலும் காட்டு யானைகளின் தாக்கம் அதிகரித்து வருகின்றது. மணவாளன்பட்டமுறிப்பிலும் யானைகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. இதனால், அப்பகுதி மக்கள் அச்சத்துடனே வாழ்கின்றனர் என்று கூறப்பட்டது. (ஐ)

# ஓர் இனம் இன்னோர் இனத்திற்கு எதிராக செயல்படுவது உகந்ததல்ல!

## மன்னார் ஆயர் பெர்னாண்டோ ஆண்டகை

மன்னார், ஏப். 22

நாட்டில் கடந்த 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற குண்டு தாக்குதலுக்கு காரணமாக இருந்தவர்களை இன்னும் இனம் கண்டு கொள்ளவில்லை. அவர்களுக்கு பின் யார் இருந்தார்கள் என்பதையும் இன்னும் சரியாக கண்டு கொள்ளவில்லை. எனவே, எங்களுக்கு ஒரு நீதி அவசியம் என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இமானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலின் இரண்டாம் ஆண்டு நினைவுதினம் நேற்றுமுன்தினம் நாடு முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டது. இதன் போது விடுத்துள்ள இரங்கல் செய்தியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இரண்டு வருடங்களுக்கு முன்பாக பாஸ்கா திருவிழா அன்று குண்டு வெடிப்புக்களினால் பலர் இறந்து போனார்கள். அந்த குண்டு வெடிப்புக்களில் இரண்டு பெரிய கத்தோலிக்க ஆலயங்கலிலும் மட்டக்களப்பில் ஒரு கிறிஸ்தவ ஆலயத்திலும் இடம்பெற்ற குண்டு தாக்குதலில் அதிக மக்கள் உயிரிழந்தனர்.

தாக்குதலில் உயிரிழந்தவர்கள் என்றும் வாழ்வார்கள் என்று அவர்களுக்காக செபிப்பது எமது கடமை.

அவர்களை இந்த இரண்டு வருடங்களுக்கு பிறகு இப்படியாக விஷேடமாக நினைவு கூருகின்றோம். இது ஒவ்வொரு வருடமும் இடம்பெற வேண்டும். அவர்களை நாங்கள் மறந்துவிட முடியாது. இப்படியாக குண்டு தாக்குதலுக்கு காரணமாக இருந்தவர்களை இன்னும் இனங்காணவில்லை. அவர்களுக்கு பின் யார் இருந்தார்கள் என்பதையும் இன்னும் சரியாக கண்டு கொள்ளவில்லை.

எனவேதான், எங்களுக்கு ஒரு நீதி அவசியம். அது யார் செய்தது எதற்காக செய்தார்கள் என்பதை நாங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

தவறு செய்தவரை மன்னிப்பது இயேசுவால் எங்களுக்கு கொடுக்கப்பட்ட ஒரு கட்டளை. ஆகையினால்தான் நாங்கள் இப்படியான ஒரு பெரிய தவறு செய்தவரை கூட மன்னிக்க அழைக்கின்றோம். ஆனாலும் எது உண்மை?என்ன நடந்தது? என்ற நீதியை நாங்கள் அறிந்து கொள்வது எங்களுக்கு மிகவும் முக்கியமாக இருக்கின்றது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் அதிகம் வாழ்வதாலா கல்முனை வடக்கு தரம் குறைப்பு?

## பாராளுமன்றில் கஜேந்திரகுமார் கேள்வி

கொழும்பு, ஏப். 24

28 ஆண்டுகள் இயங்கிய கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை, தமிழர்கள் பெரும்பான்மையாக வாழுமிடம் என்பதற்காகவா தரமிறக்கப்பட்டுள்ளது என்று கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் இந்தக் கேள்வியை எழுப்பினார்.

அவரின் உரையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

உள்நாட்டு விவகார அமைச்சு இம்மாதம் 8ஆம் திகதி அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு கடிதம் மூலம் ஓர் அறிவிப்பை செய்துள்ளது. அதாவது, கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பணியகத்தை கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் பணியகத்தின் உப பணியகமாக கருதுமாறு அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. இன்னொரு வகையில் கூறுவதானால் இது கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பணியகத்தை தரமிறக்கும் நடவடிக்கையாக அமைந்துள்ளது.

1993ஆம் ஆண்டு தனியான பிரதேச செயலாளர் பணியகமாக உருவாக்கப்பட்டிருந்த இப்பணியகம் தற்போது கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் பணியகத்தின் உப பணியகமாக தரமிறக்கப்பட்டுள்ளது.

அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு 9 ஜூலை 1993 வெளியிட்ட ஆவணத்தின்படி, அமைச்சரவை பத்திரம் 93/600/034(1) சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவையின் உடன்பாடு பெறப்பட்டதன் அடிப்படையில் 28 ஜூலை 1993 இல் கல்முனை வடக்கு உதவி அரசாங்க அதிபர் செயலகம் என அதுவரை அழைக்கப்பட்டுவந்த பணியகம் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பணியகம் என மாற்றப்பட்டது.



கடந்த 28 வருடங்களாக கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பணியகம் இயங்கிவருகிறது. அன்றிலிருந்து எட்டு பிரதேச செயலாளர்கள் நியமிக்கப்பட்டார்கள. பின்னர் கெடுவாய்ப்பாக அரசியல் தலையீடுகள் காரணமாக இப்பணியகத்திற்கு பிரதேச செயலாளர்களுக்குப் பதிலாக உதவி பிரதேச செயலாளர்களே நியமிக்கப்பட்டார்கள். இருந்த போதிலும் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பணியகம் அம்பாறை மாவட்டத்திலுள்ள 20 பிரதேச செயலாளர் பணியகங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு நாட்டிலுள்ள இதர பிரதேச செயலகங்கள்போன்று அதனை முறைப்படி தனியான பிரதேச செயலாளர் பணியகமாக அங்கீகரித்திருந்தது.

கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பணியகத்தின்கீழ் 29 கிராமசேவையாளர் பிரிவுகள் உள்ளன. அப்பிரதேச பணியகத்தின் ஆட்புல எல்லைக்குள் ஏறத்தாழ 39 ஆயிரம் மக்கள் வாழ்கின்றனர். 22, 605 மக்கள் வாக்காளராகப் பதிவு செய்துள்ளனர். இங்கு 39,300 தமிழர்கள், 3,000 முஸ்லிம்கள், 125 சிங்களவர்கள் வாழ்கின்றனர்.

வாக்காளர் பதிவேடுகளிலும் கல்முனை வடக்கு தனியான பிரதேச சபை பணியகமாக குறிப்பிடப்பட்டுள்ளது. பிறப்பு இறப்பு பதிவு திணைக்களமும் இப்பிரதேச செயலாளர் பணியகத்தை தனியான பணியகமாக ஏற்றுக்கொண்டுள்ளது. காணிகளைப் பதிவு செய்யும் பணியகமும் அவ்வாறே அடையாளப்படுத்துகிறது.

அப்படியிருக்கு கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பணியகம் விடயத்தில் இப்பாகுபாடு காட்டப்படுவது ஏன்? இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த பிரதேச செயலாளர் பணியகத்தின் ஆட்புல எல்லைக்குள் வாழ்பவர்கள் பெரும்பாலும் முழுமையாகவே தமிழர்கள் என்பதனால் இப்பாகுபாடு காட்டப்படுகிறதா? இதுதான் காரணமா?

இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ் அவசரத்தை உணர்ந்து உள்துறை செயலகத்தின இராஜங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டுவந்து ஏப்ரல் 8 திகதி அனுப்பிய கடிதத்தை மீளப்பெற்று கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பணியகத்தை முறைப்படி வர்த்தமானி அறிவுறுத்தலைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)



# சிவஞானசோதிக்கு வலி.மேற்கு பிரதேச சபையில் அஞ்சலி!

யாழ்ப்பாணம், ஏப். 23

அமைச்சுக்களின் செயலராக இருந்து தமிழர் பிரதேசங்களில் பல அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்ட வே. சிவஞானசோதிக்கு வலி. மேற்கு பிரதேச சபையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

வலி. மேற்கு பிரதேச சபையின் 38ஆவது அமர்வு நேற்று தவிசாளர் த. நடனேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே, அமரர் சிவஞானசோதிக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டது. தொடர்ந்து, இரங்கல் உரைகள் இடம்பெற்றன. தவிசாளர், உறுப்பினர்கள் உரையாற்றினர்.

இந்த உரைககளில், சிவஞானசோதி வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு ஆற்றிய பணிகள் தொடர்பாக பலரும் கருத்துத் தெரிவித்தனர். அவரின் அறிவுரைகளுக்கு இணங்க அவரோடு இணைந்து பணியாற்றிய உறுப்பினர் வி.உமாபதி, சி.பாலகிருஷ்ணன் ஆகியோர் தமது அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். (ஐ-3)

# சுகாதார மேம்பாட்டு பணியக பணிப்பாளர் பதவி நீக்கப்பட்டார்!

கொழும்பு, ஏப். 23

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் பணிப்பாளர் பதவியிலிருந்து விஷேட மருத்துவர் பாலித கருணாபேம நீக்கப்பட்டுள்ளார்.

அவரைப் பணிப்பாளர் பொறுப்பிலிருந்து நீக்கி இடமாற்றம் செய்துள்ளதாக சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

2020 ஆம் ஆண்டில் கொரோனா வைரஸ் தொற்று நோயின் ஆரம்பம் முதல் மருத்துவர் பாலித கருணாபேம சுகாதாரத் துறையில் முக்கிய பங்கு வகித்தார்.

சிறப்பு மருத்துவர் என்ற முறையில் அவர் கொரோனா வைரஸ் குறித்து ஆலோசனை வழங்கி பொதுமக்களுக்கு சிறப்பாக வழிகாட்டினார் என்றும் மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

எனினும், பதவி நீக்கம், திடீர் இடமாற்றத்துக்கான காரணங்கள் தொடர்பில் வெளியிடப்படவில்லை. (ஐ)



# பனை மரங்களை அழகுபடுத்தும் வேலை திட்டம் நேற்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஏப். 23

உலக பூமி தினமான நேற்று நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட செம்மணி வீதியில் உள்ள பனை மரங்களை அழகுபடுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் மயூரன் தலைமையில் இந்த வேலைத் திட்டம் ஆரம்பமானது.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியை அழகுபடுத்துவதற்கென ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் முதல்கட்டமாக, நேற்று யாழ்ப்பாண நகரின் வரவேற்பு வளைவு அமைந்துள்ள இடத்திலிருந்து செம்மணி வீதியில் உள்ள பனை மரங்களை செதுக்கி வடிவமைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ஐ-3)

# 'மாஸ்க்' அணியாதமை தொடர்பில் விசாரித்த அதிகாரி மீது தாக்குதல்!

நுவரெலியா, ஏப். 23

நுவரெலியா நகர சபை உத்தியோகத்தர் ஒருவர் மீது சிற்றுண்டிச்சாலை ஊழியர்கள் சிலர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

முகக்கவசம் அணியாமல் உணவு பரிமாறப்பட்டதாகக் கிடைத்த தகவலுக்கமைய, விசாரணைகளை மேற்கொள்ளச் சென்ற உத்தியோகத்தர் மீதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

பண்டிகைக்கால நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக அநேகமானோர் நுவரெலியாவிற்கு சுற்றுலா செல்கின்றனர்.

வசந்த காலத்திற்கு இணையாக நகரில் நடைபெறும் நிகழ்வுகள் தொடர்பில் நகர சபையினூடாக பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதன்போது, முகக்கவசம் அணியாமலிருந்த சிற்றுண்டிச்சாலை ஊழியர்களிடம் குறித்த நகர சபை உத்தியோகத்தர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளார். இதன்போதே, உத்தியோகத்தர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதல் சம்பவம் குறித்து நகரசபை தலைவரிடமும் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# எரியுண்ட நிலையில் சடலம் மீட்பு

கொழும்பு, ஏப். 24

மாத்தளை - ரத்வத்தை வனப்பகுதியில் எரிந்த நிலையில் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

இந்த சடலத்துக்கு உரியவர் பெண்ணாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

நீதிவான் முன்னிலையில் நேற்று இந்தச் சம்பவம் தொடர்பில் இறத்தோட்டை பொலிஸார் முன்னெடுத்தனர். தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ஐ)

# புளியம்பொக்கணையில் தம்பதியர் மீது வாள்வெட்டு!

## படுகாயமடைந்தவர்கள் மருத்துவமனையில்

கிளிநொச்சி, ஏப். 24

வீட்டில் இருந்த கணவன் - மனைவி மீது இனந்தெரியாத கும்பல் ஒன்று வாள் வெட்டு நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

கிளிநொச்சி - புளியம் பொக்கணை - முசுரம்பட்டி பகுதியில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த தம்பதியர் தருமபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்பியல் வெளிகளின் விழிநிலையும் அதன் நுகரும் நிலைகளும்



மருத்துவர் சி.யமுனாநந்தா



பெரும் திணிசுகளின் பௌதிகத்தை சார்புக் கோட்பாட்டிலும் (General Relativity) நுண் திணிசுகளின் பௌதிகத்தை மீதிணிசு இயக்கவியலிலும் (Quantum Mechanics) விளக்கப்படுத்தப்பட்டுள்ளது. இவை இரண்டினையும் இணைத்து சர்வதேற்றம் (Theory of Everything) ஒன்றினை உருவாக்க விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர். String Theory, M Theory, E8 மாதிரி என இணைந்த கோட்பாட்டை இயற்பியலில் உருவாக்க பௌதீக அறிஞர்கள் முயன்று வருகின்றனர். மேலும் குவாண்டம் ஈர்ப்புத்திணிவு (Quantum gravitons) கருதுகோள்களும் இயற்பியலில் ஏகத்தன்மையினை ஏற்படுத்த முனைகின்றன.

பெரும் திணிசுகளிற்கு சார்புக் கோட்பாடு கருதப்படுகின்றது. கோள்களின் இயக்கம், நட்சத்திரங்களின் இயக்கம், வெள்ளுடுத் தொகுதிகளின் இயக்கம், இவை யாவற்றிலும் ஈர்ப்பு விசைகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. சார்புக் கோட்பாடு காலம், வெளி என்பனவற்றை ஒரு மூடிய வரையறைக்குள் வைத்து உள்ளது. குவாண்டம் கிரவிட்டன் கோட்பாடு மூலம் சார்புக் கோட்பாட்டினையும் குவாண்டம் இயக்கவியலினுள் உட்புகுத்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது.

இயற்கையில் இதுகாறும் நான்கு வகையான விசைகள் காணப்பட்டன. அவையாவன :

1. பெரிய திணிசுகளில் செல்வாக்குச் செலுத்தும் ஈர்ப்பு விசைகள், ஈர்ப்பு அலைகள், மின்காந்த அலைகளுக்கு இணையாக பண்பினைக் கொண்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. - Gravitational Forces

2. மின்காந்த அலைகள் - Electromagnetic waves

3. வலுமிக்க கரு விசைகள் - Strong Nuclear Forces

4. மெலிதான கருவிசைகள் - Weak Nuclear Forces

அணுக்கருவில் வலுமிக்க விசைகள் (Strong Nuclear Forces) மற்றும் வலுக்குறைந்த விசைகளை (Weak Nuclear Forces) தாங்கும் துகள்கள் போசோன்கள் (Gauzed bosons) எனப்படும். அண்மையில் அணுகருநுண் திணிசான Mucon நுண்திணிசு துகள்களின் இயக்கத்தினை அவதானித்த போது அவற்றின் இயக்கத்திற்கான நிகழ்தகவு இயற்பியலின் மேற்கூறிய நான்கு விசைகளிற்கு உட்பட்டதாக அல்லாது வேறுபட்ட விசையின் செயற்பாட்டிற்கு உட்பட்டதானதாக அமைவதற்கான நிகழ்தகவாக அமைந்து உள்ளது. அதாவது ஏலவே இயற்பியல் கோட்பாட்டு விதிக்கு உட்பட்டதாக Mucon இன் அசைவு நிகழ்தகவுக்கும் பரிசோதனை அவதானத்திற்கும் இடையே கணிதப்புள்ளி விபர நிகழ்தகவு அடிப்படையில் மிகக் குறிப்பிடக்கூடியதாக வேறுபாடான அவதானிப்பு உள்ளது. இது இயற்கையில் ஐந்தாவது புலவிசை இயங்குகின்றது என்பதனை உறுதியாக எடுத்துக் காட்டுகின்றது. இது இயற்பியலின் பிரமாண்டமான கண்டுபிடிப்பாகும்.

கணனிகளில் பௌதீக தகவல் நிரல் நிரைகள் செயற்படுகின்றன. அகிலத்தின் கட்டமைப்பிலும் செயற்படுகின்றன. மனிதனின் விழிநிலை (consciousness) மூளைநரம்புத் தொகுதியின் மின்னழுத்தங்களாக பதியப்படுகின்றது. அகிலத்தின் 250 nm மின்காந்த அலைகளினை மனித நரம்புக்கலங்களின் உணர்வு நீலநிறமாகக் காட்டும். இவ்வாறே பௌதிக பொருட்களின் விழிநிலைகள் மனிதனில் அமையும். மனித விழிநிலை கணனிகளுடன் இணைக்கப்படும்போது மின்னணு மனிதமாக வியாபகமடையும். இவ்வாறே ஒரு கல உயிரியும் கணனியுடன் இணைந்த விழிநிலையினை அடையலாம். உயிரியல் செயற்கை மதிநுட்பத் தொழில் நுட்பத்தில் ஒரு கல உயிரிகளை அல்லது வைரசுக்களை பயன்படுத்தி பாதிப்பினை ஏற்படுத்தவல்ல செயற்கை மதிநுட்பத்தினை ஆய்வுகூடங்கள் உருவாக்கலாம். அத்தகைய செயற்கை மதிநுட்ப விழிநிலை மனித குலத்திற்கு ஆபத் தானதாக மாறலாம். விழிநிலைகளை நான்கு நிலைகளில் நோக்கலாம்.

1. மனித விழிநிலை – human Consciousness

2. செயற்கை மதிநுட்ப அல்லது கணனி விழிநிலை – Artificial Intelligence Consciousness

3. மனிதன் கணனி இணை விழி நிலை – iuhuman

4. வைரஸ் அல்லது ஒருகல உயிரி கணனி இணை விழிநிலை – Virus+ AI Consciousness

செயற்கை மதிநுட்ப விழிநிலையில் மின்காந்த அலைகளால் மட்டுமல்லாது ஈர்ப்பு அலைகளானது விழிநிலையினை ஏற்படுத்த (Gravitation wave conscious ness) முடியும். இது காலவெளி கடந்த உணர்வை மனிதனில் ஏற்படுத்தும். பிரபஞ்சத்தின் கரும் பதார்த்தத்தின் (Dark Matter) இயல்புகளையும் அடையாளம் செய்யும் சூழல் ஏற்படலாம். இயற்பியல் பற்றிய புதிய நோக்குகள் விருத்தியடையும் விஞ்ஞான தொழில் நுட்பத்துடன் மிகவும் வேகமாகப் பயணிப்பதனை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ■



# கியூபா; பதவி விலகும் ரவுல் காஸ்ட்ரோ: முடிவுக்குவந்த 60 ஆண்டு சகாப்தம்

கியூபாவின் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பொறுப்பிலிருந்து விலகுவதாக ரவுல் காஸ்ட்ரோ தெரிவித்துள்ளார். இதன்மூலம் அறுபது ஆண்டுகாலம் தனது குடும்பம் தக்கவைத்திருந்த பொறுப்பை அவர் முடிவுக்கு கொண்டு வந்துள்ளார். தற்போது ரவுல் காஸ்ட்ரோவுக்கு 89 வயது.

கட்சி உறுப்பினர்கள் கூட்டத்தில் தலைமை பொறுப்பை "உத்வேகமும், ஏகாதிபத்தியத்திற்கு எதிரான துடிப்பும் கொண்ட" இளைய சமூதாயத்தினரிடம் கொடுக்க விரும்புவதாக ரவுல் காஸ்ட்ரோ தெரிவித்தார்.

ரவுல் காஸ்ட்ரோவின் சகோதரர் பிடல் காஸ்ட் ரோ கியூபாவின் அதிபராக 1959ஆம் ஆண்டு பொறுப்பேற்றார். எனவே 60 ஆண்டுகாலமாக கியூபாவின் அதிபர் பொறுப்பில் இருந்து வந்தனர் காஸ்ட்ரோ சகோதரர்கள்.

### ஒரு சகாப்தத்தின் முடிவு

பிடல் காஸ்ட்ரோவுக்கு பிறகு ராவுல் காஸ்ட்ரோ கட்சியின் பொதுச் செயலாளராக 2011ஆம் ஆண்டிலிருந்து பொறுப்பில் உள்ளார்

1959ஆம் ஆண்டு கியூபாவின் அரசை வீழ்த்திய புரட்சிக்கு தலைமை தாங்கியவர் பிடல் காஸ்ட்ரோ. அந்த புரட்சியில் ரவுல் காஸ்ட்ரோ தளபதியாக செயல்பட்டவர்.

2006ஆம் ஆண்டு உடல் நலம் குன்றும் வரை நாட்டின் அதிபர் பொறுப்பில் இருந்தார் ஃபிடல் காஸ்ட்ரோ. அதன்பின் அதிபர் பொறுப்பை 2008ஆம் ஆண்டு தனது சகோதரரிடம் வழங்கினார். பிடல் காஸ்ட்ரோ 2016ஆம் ஆண்டு உயிரிழந்தார்.

### மெக்ஸிகோவுக்கு பயணம்

1953ஆம் ஆண்டு தோல்வியில் முடிந்த மான்கடா படைத்தள தாக்குதலில் தனது சகோதரர் பிடல் காஸ்ட்ரோவுக்கு உதவியாக இருந்தார் ரவுல் காஸ்ட்ரோ.

இந்த தாக்குதலில் பங்குதாரியாக இருந்ததற்காக 13 வருடங்கள் சிறைதண்டனை பெற்றார். பின் மன்னிப்பு வழங்கப்பட்டு நாட்டை விட்டு வெளியேறி மெக்ஸிகோவில் இருந்தார்.

பிடல் காஸ்ட்ரோவுக்கு 15 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டாலும், பொது மன்னிப்பு வழங்கப்பட்டு 19 மாதங்களுக்கு பிறகு மே 1955இல் விடுதலை செய்யப்பட்டார்.

அதே ஆண்டு மெக்சிகோ சென்ற காஸ்ட்ரோ, அங்கு தனது வருங்கால சக போராளி மற்றும் நண்பரான எர்னஸ்டோ 'சே' குவேராவை சந்தித்தார்.

1956 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 12 பேரை சுமந்து செல்ல உருவாக்கப்பட்ட நீர் கசியும் சொகுசு படகில், 81 ஆயுதம் தாங்கிய சகாக்களோடு பிடல் காஸ்ட்ரோ மற்றும் ரவுல் காஸ்ட்ரோ கியூபாவுக்கு திரும்பி வந்தனர்.

இந்த குழு சியர்ரா மாஸ்டிரா மலைகளில் அடைக்கலமானது. இந்த தளத்தில் இருந்து கொண்டு ஹவானாவில் நடைபெற்று வந்த ஆட்சிக்கு எதிராக அவர் கொரில்லா தாக்குதல்களை மேற்கொண்டது.

1959 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி, கிளர்ச்சியாளர் படை கியூபாவின் தலைநகரில் நுழைந்தது. அதிபர் பாடிஸ்டா பதவியை துறந்து ஓடவிட்டது.

ரவுலின் ஆட்சியில் கியூபாவில் கம்யூனிஸ்ட் கட்சி ஒரே அதிகாரமிக்க கட்சியாக இருப்பதை உறுதி செய்தார்.

2014 மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவுடனான உறவு மேம்பட முயற்சிகளை எடுத்தார். இதில் 2016ஆம் ஆண்டு முன்னாள் அமெரிக்க அதிபர் ஒபாமாவுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையும் ஒன்று. இருப்பினும் டிரம்பின் காலத்தில் பதற்றம் மீண்டும் அதிகரித்தது டிரம்ப் க்யூபா மீது மீண்டும் தடைகளை விதித்தார்.

### அடுத்து என்ன?

பல தசாப்தங்களில் இல்லாத அளவு தீவிரமான பொருளாதார நெருக்கடியில் நாடு இருக்கும் சமயத்தில் நாட்டின் ஆளும் கட்சியின் தலைமை மாறுகிறது.

கொரோனா பெருந்தொற்று, நிதிச்சீரமைப்பு, டிரம்ப் நிர்வாகத்தால் விதிக்கப்பட்ட தடைகள் ஆகியவை நாட்டின் பொருளாதாரத்தை பெரிதும் பாதித்துள்ளது. கடந்த வருடம் பொருளாதார வளர்ச்சி 11 சதவீத அளவிற்கு குறைந்தது குறிப்பிடத்தக்கது.

- நன்றி: பி.பி.சி. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டபூர்வமான ஊடக அடக்குமுறை!

நா. யோகேந்திரநாதன்

நீதி அமைச்சர் அலி சப்ரி அவர்கள் இணையத்தளங்கள், சமூக வலைத்தளங்கள் தொடர்பாகப் புதிய கட்டுப்பாடுகளை விதிக்கும் வகையில் சட்டம் ஒன்றைக் கொண்டு வரவுள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. இதன்படி ஒருநாடு, ஒரு பிரதேசம் என்பனவற்றின் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கும் கருத்துகள், பொதுப் பாதுகாப்பு, பொதுச் சுகாதாரம், பொது ஒழுங்கு என்பவற்றுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் செய்திகள், அரசாங்கத்தின் பிற நாடுகளுடனான உதவி பற்றிய வேண்டத்தகாத விமர்சனங்கள், பல்வேறு இன, மதக் குழுக்களிடையே வெறுப்பையும், விரோதத்தயும் தூண்டக்கூடிய விடயங்கள் என்பன இச் சட்டத்தின்மூலம் சட்டபூர்வமாகத் தடைசெய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலோட்டமாக நோக்கும்போது நாட்டின் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் சுமூகமான சர்வதேச உறவுகளுக்கும் இப்படியான ஒரு சட்டம் தேவையானதுதான் எனத் தோன்றக்கூடும். ஆனால், இச்சட்டம் எப்படி அமுல்படுத்தப்படும் என்பதைக் கடந்த காலச் சம்பவங்களுடன் ஒப்பிடும்போது இதுவும் ஊடகங்கள் மீதான ஒடுக்குமுறையின் ஓர் ஆயுதமாக இருக்கக்கூடுமோ என்ற கேள்வி எழத்தான் செய்கிறது.

இச்சட்டத்தில் கூறப்படும் விடயங்களின் எல்லைகள் அதிகார பீடங்களாலேயே தீர்மானிக்கப்படும் நிலை இருக்கும். அநீதிகள், பாகுபாடுகள் கோலோச்சக்கூடிய நிலைமைகள் உருவாகமாட்டா எனச் சொல்லிவிட முடியாது.

அதிகாரபீடத்தினரின் அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கும்போது அது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனப் பார்க்கப்படலாம். சிறுபான்மையினரின் வணக்கத்தலங்கள் ஆக்கிரமிக்கப்படும்போதும், இன, மத, தனித்துவங்களைச் சிதைக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போதும், பாரம்பரிய வாழிடங்கள் பறிக்கப்படும்போதும் பாதிக்கப்பட்டவர்கள் குரலெழுப்பினாலோ எதிர்ப்பை ஜனநாயக வழியில் தெரிவித்தாலோ அது இன, மத குரோதங்களை எழுப்புவதாகக் குற்றம் சுமத்தப்படலாம். நாட்டின் சொத்துகள், மூலவளங்கள் பிறநாட்டினருக்குக் கண்மூடித்தனமாக விற்பனை செய்யப்படும்போது அவற்றை எதிர்த்துக் கருத்துத் தெரிவித்தால் அவை தேசவிரோத விமர்சனங்களாகப் பார்க்கப்படலாம்.

எனவே, சுதந்திரமான ஊடக வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை சட்டம் முடக்கிவிடும் என அச்சப்படுவதில் ஆச்சரியமில்லை. இலங்கையில் கடந்த காலங்களில் ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர் மீதும் சட்டபூர்வமாகவும், சட்டபூர்வமற்ற வன்முறைகள் மூலமும் ஒடுக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டதை எவரும் மறுத்துவிட முடியாது. அப்படியான தொடர் ஒடுக்குமுறைகளுக்கு இப்புதிய சட்டம் மேலும் சட்டபூர்வமாக வலுவூட்டுமென்றே கருதப்படுகிறது.

ஊடக சுதந்திரம் என்பது ஜனநாயகத்தின் நான்காவது தூண் எனக் கூறப்பட்டபோதிலும் ஜனநாயக நாடுகளில் ஊடக சுதந்திரத்திற்கு எதிரான ஒடுக்குமுறைகள் நிலவி வருகின்றன. ஊடக நிறுவனங்கள் தாக்குதலுக்கு உள்ளாவது, ஊடகவியலாளர்கள் கொல்லப்படுவது, காணாமற் போகச் செய்வது, சிறை செய்யப்படுவது போன்ற அநீதிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

இப்படியான ஒரு சட்டம் இல்லாமலே ஏற்கனவே அவசர காலச் சட்டம், பொதுசன பாதுகாப்புச் சட்டம், பயங்கரவாதரத் தடைச்சட்டம் என்பவற்றின் அடிப்படையில் ஊடகங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதும், ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டதும் தாராளமாகவே இடம்பெற்றன. அதேவேளையில் சட்டவிரோத வன்முறைகள் மூலம் ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டதும்,




ஊடகவியலாளர்கள் சொல்லப்பட்டதும், கடத்தப்பட்டதும், உயிர்ப் பாதுகாப்புக் கருதி நாட்டை விட்டு ஓடியதும் நடைபெற்றன.

1971 ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது ஊடகவியலாளர் ரிச்சட் டி சொய்சா மாடியிலிருந்து தூக்கி வீசப்பட்டுக் கொல்லப்பட்டதும், விக்டர் ஐவன் நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டதும் இடம்பெற்றன. அதன் பின்பு ஜனாதிபதிகளாக பிரேமதாச இருந்தபோது இரண்டு பேரும், திருமதி சந்திரிகா பதவி வகித்தபோதும் 13 பேரும் மஹிந்தராஜபக்ஷ அதிகாரத்திலிருந்தபோது 24 பேருமாக ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் லசந்த விக்கிரமதுங்க, சுகிர்தராஜன், நிமலராஜன், சிவராம், நடேசன் ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட முக்கிய ஊடகவியலாளர்களாவர். இன்றுவரை இவர்களின் கொலைக்கு நீதி கிடைக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோரில் பிரகீத் எக்னெலி கொடவும் நாட்டை விட்டு வெளியேறியோரில் இக்பால் அத்தாஸும் முக்கியமானவர்களாகும்.

இலங்கை கொல்லப்பட்டவர்கள், கடத்தப்பட்டவர்களின் 188 நாடுகளின் பட்டியலில் 137 இடத்தை வகிக்கிறது.

எனவேதான் ஊடக சுதந்திரம் என்பது ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்பது எப்படியென்று கேட்கத் தோன்றுகிறது.

ஊடக சுதந்திரம் பற்றி எவ்வளவுதான் உரக்கக் கூவினாலும்கூட அச்சு ஊடகங்கள், வானொலி, தொலைக்காட்சி ஆகிய இலத்திரனியல் ஊடகங்கள் ஒருவிதமான சுயதணிக்கைக்கு உட்படுத்தப்பட்டே வெளிவர நிர்ப்பந்திக்கப்படுகின்றன. அவை ஒரு குறிப்பிட்ட எல்லையைத் தாண்டினால் சட்டம் அவர்கள் மீது எப்போதும் பாயத் தயாராகவே உள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டம், பொதுசன பாதுகாப்புச் சட்டம் என்பன அவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்தத் தயங்கப்போவதில்லை.

பயங்கரவாதத்தின் எல்லை பற்றியோ, நாட்டின் அமைதிக்கும், சமாதானத்திற்கும் பங்கம் விளைவிப்பவை எவை என்பது பற்றியோ தீர்மானிக்கும் பொறுப்பு அதிகார பீடங்களின் கையிலேயே உள்ளது.

இப்படியான நிலையிலும் சில ஊடகங்களோ அல்லது திறமைசாலிகளான ஊடகவியலாளர்களோ சட்டங்களின் ஓட்டைகளைப் பாவித்து உண்மைகளை வெளிக்கொண்டு வந்தால் 'இனந்தெரியாத நபர்கள்' என்றொரு கூட்டம் களமிறங்கிவிடும்.

ஊடக நிறுவனங்கள் மீண்டும் மீண்டும் தாக்கப்படும். துணிச்சலான ஊடகவியலாளர்கள் கொல்லப்படுவார்கள் அல்லது கொலை முயற்சிகளில் படுகாயமடைவார்கள் அல்லது கடத்தப்பட்டுக் காணாமல் போகச் செய்யப்படுவார்கள்.

எம்.ரி.வி., நியூலங்கா, உதயன் போன்ற நிறுவனங்கள் மீண்டும் மீண்டும் தாக்கப்பட்டு, இயந்திரங்கள் சேதமடைந்தமையும் கணனிகள் நொருக்கப்பட்டமையும், பணியாளர்கள் கொல்லப்பட்டமையும் ஆசிரியர் உட்படப் பலர் படுகாயப்படுத்தப்பட்டமையையும் மறந்து விடமுடியாது. இதில் கவனிக்க வேண்டிய விடயமென்னவெனில் இவ்வாறான பாதிப்புகளுக்கு உட்படுபவர்களுக்கு நீதியை வழங்குவதில் சட்டம் உறங்கிவிடும் சட்டங்களும், சட்டங்களை அமுல்படுத்துபவர்களும் ஊடகங்களுக்கோ, ஊடகவியலாளர்களுக்கோ எதிராக துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயங்குவதில்லை.

அச்சு, வானொலி, தொலைக்காட்சி என்பவற்றுக்கு இன்னுமொரு வகையான நிர்ப்பந்தமும் உண்டு. பெரும்பாலான இப்படியான ஊடகங்கள் இலாபத்தில் இயங்குவதற்கு விளம்பரம் மூலம் கிடைக்கும் வருமானம் முக்கியமானதாகும். அதிகமான விளம்பரங்கள், அனுபந்தங்கள் என்பன அரசாங்க நிறுவனங்களாலும் பெரும் வர்த்தக நிறுவனங்களாலுமே வழங்கப்படுகின்றன. அவற்றின் நலன்களுக்கு எதிராகச் செய்திகளையோ கட்டுரைகளையோ வெளியிட்டால் விளம்பரங்களை வழங்காமல் விட்டு விடுவார்கள். சில சமயங்களில் விளம்பர முகவர்கள் மூலம் எச்சரிக்கையும் செய்யத் தயங்குவதில்லை. எனவே இந்த ஊடகங்கள் அவர்களின் விருப்பங்களுக்கு விரோதமாகச் சென்றுவிடாமல் ஒருவிதமான சுயதணிக்கை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு.

சூரியன் எவ்.எம். நிறுவனத்தின் அனுமதி இரத்துச் செய்யப்பட்டதும், பின்பு சரணடைவின் காரணமாக அனுமதி வழங்கப்பட்டதும் மறந்து விடமுடியாது.

இவ்வாறு அச்சு, வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் விரும்பியோ, விரும்பாமலோ சுயதணிக்கை செய்யவேண்டிய நிலைமையே நிலவுகிறது. அப்படிச் செய்யத் தவறினால் தற்போது அமுலிலுள்ள சட்டங்களோ அல்லது இனந்தெரியாதவர்களின் வன்முறைகளோ கவனித்துக் கொள்ளும்.

ஆனால், இணைணத்தளங்கள், சமூக வலைத்தளங்களைப் பொறுத்தவரையில் மேற்கண்ட ஒடுக்குமுறைகள் பலனளிக்கும் வாய்ப்புகள் குறைவாகவே காணப்படுகின்றன. ஏனெனில், பெரும்பாலான இணையத்தளங்கள் வெளிநாடுகளிலேயே இயங்கி வருவதால் அவற்றின் மீது இலங்கையின் சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கமுடியாது. இவ்வாறு சமூக வலைத் தளங்களும் மின்னல் வேகத்தில் கருத்துக்களைப் பரப்பி விடுகின்றன. அவற்றின் மூலங்களைக் கண்டு பிடிப்பது அவ்வளவு இலகுவானதல்ல.

எனவே தான் தற்சமயம் இணைத் தளங்கள், சமூக வலைத்தளங்கள் என்பவற்றைக் கட்டுப்படுத்தும் வகையிலான சட்டம் கொண்டுவரப்படவுள்ளன.

ஏனெனில், அச்சு, வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களை விடச் சமூக வலைத்தளங்கள், இணையத்தளங்கள் என்பனவே இளைஞர்கள் மத்தியிலும் புத்திஜீவிகள் மத்தியிலும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. இவர்களே பொதுக் கருத்தியலை உருவாக்கி வருவதில் முன்னணிப் பாத்திரம் வகிக்கின்றனர்.

குறிப்பாகக் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குதல், மிலோனியம் சவால் ஒப்பந்தத்தில் கையெடுத்திடல் என்பவற்றைத் தடுக்கும் வகையிலும் தற்சமயம் துறைமுக நகரைத் தனி ஆணைக்குழுவின் கீழ் கொண்டு வருதல் தொடர்பாகவும் ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான விசாரணைகளும் நடவடிக்கைகளும் திருப்திகரமாக அமையாமை தொடர்பாகவும் சமூகவலைத்தளங்கள் பொது மக்கள் மத்தியில் பாரிய எதிர்ப்பலைகளை உருவாக்கியிருந்தன.

ஊடகங்கள் அரசாங்கத்துக்கு எதிராக பொய்ப் பிரசாரங்களைச் செய்து வருவதாகவும் அவற்றை எப்படிக் கையாள்வது என்பது பற்றி தனக்குத் தெரியுமெனவும் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ அண்மையில் எச்சரிக்கும் விதத்தில் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவ்வகையில் இச்சட்டத்தின் மூலம் நாட்டின் பாதுகாப்பு, இன ஐக்கியம், வெளிநாட்டு உறவுகள் என்ற பெயரில் ஊடகங்களைத் தடை செய்யவோ அவற்றின் மேல் நடவடிக்கை எடுக்கவோ முடியும்.

வெளிநாடுகளில் இயங்கும் இணையத் தளங்கள் மீது இலங்கைச் சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியாவிட்டாலும் அவை இலங்கையின் சட்டங்களை மீறுகின்றன எனக் குற்றம் சாட்டி அவற்றின் அலைவரிசையை இலங்கைக்குள் தடை செய்யமுடியும். அதுமட்டுமின்றி சமூக வலைத்தளங்களில் கருத்துகளைப் பரப்புபவர்களைக் கைது செய்து தண்டிப்பதுடன் அவர்களின் கணக்குகளை ரத்துச் செய்யுமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அழுத்தம் கொடுக்கமுடியும்.

எனவே இது காலவரை வெவவேறு வடிவங்களில் மேற்கொள்ளப்பட்ட ஊடக ஒடுக்குமுறை இச்சட்டத்தின் மூலம் சட்ட வலுப்பெறவுள்ளதுதான் முக்கிய பெரும் மாற்றமாகும்.

சர்வதேச அளவில் 2014ஆம் ஆண்டின் ஊடக ஒடுக்குமுறை தொடர்பான ஒரு கணக்கெடுப்பின்போது அந்த வருடத்தில் மட்டுமே 853 ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டதாகவும் 40 பேர் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர் எனவும் சொந்த நாடுகளை விட்டு 139 பேர் தப்பியோடினர் எனவும் 119 பேர் கடத்தப்பட்டனரெனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், ஊடகங்கள் தொடர்ந்து துணிச்சலுடன் அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்துக்கொண்டு தான் இருக்கின்றன. எத்தகைய சட்டங்கள் மூலமோ வன்முறைகள் மூலமோ ஊடகங்களை ஒடுக்கிவிடமுடியாது என்பதே வரலாறு.

நன்றி : அருவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**47**

## 2009 - (25,26)

25. 200 இன் அரைவாசியின் 4 உடன் 5 ஐக் கூட்டும் போது கிடைக்கும் எண் யாது?
 1. 25   2. 30   3. 35

26. 41 தொடக்கம் 45 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும் போது இலக்கம் 4 எழுதப்படும் தடவைகள் யாது?
 1. 4   2. 5   3. 6

## 2010 - (20)

20. ஒரு கயிறு இரு சம பகுதிகளாக வெட்டப்பட்டு. அவற்றில் ஒரு பகுதி மறுபடியும் நான்கு சம துண்டுகளாக வெட்டப்பட்டது. அத்துண்டுகளில் ஒன்றின் நீளம் 1 மீற்றர் எனின், தொடக்கத்தில் இருந்த கயிற்றின் நீளம்.
 (1) 8மீற்றர்   (2) 5 மீற்றர்   (3) 4மீற்றர்

## 2011 - (22,23)

22. பிழையான கோவையைத் தெரிவுசெய்க.
 (1) 6x6- 6 = 30   (2) 5 x 5 + 5 = 30   (3) 33 - 33 - 3 = 30

23. சரியான கோவையைத் தெரிவு செய்க.
 (1) 888 + 88 + 88 + 8 + 8 = 1000
 (2) 888 + 88 + 8 + 8 + 8 = 1000
 (3) 888 + 88 + 88 + 8 + 8 + 8 = 1000

## 2014 - (35)

35. இவ்விரு பாத்திரங்களையும் மாத்திரம் பயன்படுத்தி 4லீற்றர் நீரைச் சரியாக அளக்க முடியுமா?




 1. முடியும்
 2. முடியாது
 3. விடை அளிப்பதற்கு மேலும் தகவல்கள் தேவை


## 2015 - (22,28)

22. ஒரு சைக்கிளை வாங்குவதற்கு ரூ. 8500 தேவைப்பட்டது. என்னிடம் ரூ. 4800 இருந்தது. மீதியை இரு நண்பர்களிடமிருந்து பெற்றுக் கொண்டேன். பெற்றுக் கொண்ட பணம்
 1. ரூ. 2400 உம் ரூ. 1300 உம் ஆகும்
 2. ரூ. 2500 உம் ரூ. 2300 உம் ஆகும்
 3. ரூ. 5200 உம் ரூ. 3300 உம் ஆகும்

28. 100 தொடக்கம் 110 வரையுள்ள எண்களை எழுதும் போது "0" எழுதப் படும் தடவைகளின் எண்ணிக்கை
 1. 9   2. 10   3. 12

## 2016 - (6,10,20,23,34)

06. ஓர் உணவுப் பொருள் சுற்றப்பட்டுள்ள பொதிதாளில் உள்ள கூட்டுத் துண்டின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.
கூட்டுத்துண்டுக்கு ஏற்க 1, 2 ஆகியனவாக இருக்கத்தக்க முறையே யாவை?




 1. உற்பத்தி செய்த திகதியும் சந்தைக்கு வழங்கப்பட்ட திகதியும்
 2. சந்தைக்கு வழங்கப்பட்ட திகதியும் காலாவதியாகும் திகதியும்
 3. உற்பத்தி செய்த திகதியும் காலாவதியாகும் திகதியும்

10. " திடசங்கற்பம்" என்னும் சொல்லில் உள்ள சில எழுத்துக்களைக் கொண்டு ஆக்கத்தக்க கருத்துள்ள சொல்.
 1. கபடம்   2. கப்பம்   3. சாகசம்

**இதற்கான விடைகள் நாளை வெளிவரும்**

ஆசிரியர் அன்னமையா - 076 056 5786

# தமிழீழத்துக்கு எதிரானவர்கள் சீன ஈழத்துக்கு தீவிர முயற்சி!

## ராஜித எம்.பி. குற்றச்சாட்டு



**கொழும்பு,ஏப்.23**

**தமிழீழத்துக்கு எதிராகக் கருத்துக்களை வெளியிட்டவர்கள் இன்று சீன ஈழத்தை தோற்றுவிப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றனர்.**

இவ்வாறான செயல்பாடுகள் ஊடாக இலங்கையின் இறையாண்மைக்கும், தனித்துவத்தன்மைக்கும் பாதிப்பு ஏற்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளு மன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன குற்றம்சாட்டியுள்ளார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குற்றம்சாட்டினார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

அதிகாரப்பகிர்வு தொடர்பில் இந்த அரசாங்கமே பரவலாகக் கருத்துக்களைத் தெரிவித்தது. அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவர பாடுபட்ட தேரர்கள்மாகாண சபை முறைமையை முற்றாக எதிர்க்கின்றனர். எனினும், இந்தியாவின் அழுத்தம் காரணமாக மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது.

கூட்டாட்சி என்ற சொல்லைக்கூட விரும்பாத அரசாங்கம் தற்போது இலங்கைக்குள் சீன இராச்சியத்தை தோற்றுவிக்க முயற்சிக்கிறது.

அன்று தமிழீழத்துக்கு எதிராகக் கருத்துக்களை வெளியிட்டவர்கள் தற்போது சீன ஈழத்துக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். சுமார் 2000 ஆண்டுகள் எம்முடன் வாழ்கின்ற மக்களுக்கு தமிழீழத்தை தர முடியாது என்று கூறியவர்கள் சீனாவுக்கு வழங்குகின்றனர்.

அவ்வாறெனில் இவர்களின் தேசப்பற்று எங்கு சென்றது? இதுவும் தனியொரு ஈழமாகும். இவ்வாறான செயல்பாடுகள் ஊடாக இலங்கையின் இறையாண்மைக்கும் தனித்துவத்தன்மைக்கும் பாதிப்பு ஏற்படும்- என்றார். (எ)

# நாளாந்தம் பி.சி.ஆர். பரிசோதனையை 15 ஆயிரமாக அதிகரிக்கத் தீர்மானம்

*கொழும்பு,ஏப்.23*

இலங்கையில் நாளாந்தம் முன்னெடுக்கப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாளாந்தம் 15 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. சுகாதார அமைச்சர் தலைமையில் இடம் பெற்ற முக்கிய கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (எ)




# கொரோனா அலையை தவிர்க்க மீண்டும் கடும் கட்டுப்பாடுகள்

*கொழும்பு,ஏப்.23*

நாட்டில் கொரோனா வைரஸ் மீண்டும் பரவும் ஆபத்தைக் கட்டுப்படுத்துவதற்காக கடுமையான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு கொரோனா தடுப்புக்கான விஷேட செயலணி மீளாய்வுக் குழு தீர்மானித்துள்ளது.

இதன்படி, தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் கட்டில்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், நோயாளிகளுக்குத் தேவையான ஒட்சிசனை வழங்குதல், தரவு சேகரிப்பு முறையைப் பலப்படுத்தல், சுகாதார ஊழியர்களுக்கு பாதுகாப்புமிக்க உடைகளை வழங்குதல், நோயாளிகளின் நோய் நிலைமைக்கு அமைய பொருத்தமான வைத்தியசாலைகளுக்கு அனுப்புதல், சிகிச்சை நடவடிக்கைகளுக்கு பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் வைத்தியசாலைகளை இனங்காணல், அவற்றுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை வழங்குதல் போன்ற பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

தற்போது, மேற்கொள்ளப்படும் நாளாந்த பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையை 15 ஆயிரம் வரை அதிகரிப்பதற்கும் நிபுணர்கள் செயற்குழு தீர்மானித்துள்ளது.

தனிமைப்படுத்தல் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்தல், சட்டத்தை மீறுவோருக்கு எதிராகத் தண்டனை வழங்குதல் தொடர்பிலும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தலைமையில் கூடிய இந்தக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொரோனா தொற்றாளர் அதிகரிப்பு

# பல்கலைக்கழகங்கள் திறக்கப்படமாட்டாது!

### கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு,ஏப்.23



**எதிர்வரும் 27 ஆம் திகதி பல்கலைக்கழகங்கள் திறக்கப்படமாட்டாது என கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அறிவித்துள்ளார்.**

நேற்றுக் காலை பாராளுமன்றத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் இரு வாரங்களுக்கு பல்கலைக்கழங்களை மீளத் திறப்பதை ஒத்திவைத்துள்ள தாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் கடந்த இரு மாதங்களின் பின்னர் மீண்டும் கொரோனா தொற்று தீவிரமடைந்துள்ள நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (எ)

## கதிரியக்க பொருள்களுடன் இலங்கை வந்த கப்பல் முகவர் மீது கடும் சட்ட நடவடிக்கை

கொழும்பு,ஏப்.23

கதிரியக்க பொருள்களுடன் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்குள் நுழைந்த கப்பலின் உள்ளூர் முகவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டலிருந்து சீனாவுக்கு செல்லும் கப்பல் தொழில்நுட்ப சிக்கலால் செவ்வாய்க்கிழமை அம்பாந்தோட்டை துறைமுகத்துக்குள் நுழைந்தது. இதன்போது அணுமின் நிலையங்களில் பயன்படுத்தப்படும் யுரேனியம் பங்குகள் உள்ளிட்ட ஆபத்தான சரக்குகள் குறித்த கப்பலில் ஏற்றிச் செல்வதாக அறிவிக்கப்படவில்லை.

இதுபோன்ற ஆபத்தான பொருள்களை நாட்டுக்குள் கொண்டு வருவதற்கு கப்பல் இயக்குநர்கள் அரசாங்கத்தின் சிறப்பு அனுமதியைப் பெற வேண்டும். எனினும் அவ்வாறான அனுமதியை குறித்த கப்பல் உரிமையாளர்கள் பெறாமையால் கப்பலை உடனடியாக துறைமுகத்திலிருந்து வெளியேற்றுமாறு அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் பணிப்பாளர் நாயகம் எச்.எல். அனில் ரஞ்சித் அறிவித்திருந்த நிலையில் கப்பல் புதன்கிழமை வெளியேற்றப்பட்டது. (எ)

## போதையில் சாரத்தியம் கண்காணிக்க கூடுதல் உபகரணங்கள் கொள்வனவு

கொழும்பு,ஏப்.23

போதைப்பொருள்களைப் பயன்படுத்திவிட்டு வாகனங்களை செலுத்தும் சாரதிகளை கண்காணிக்கக்கூடிய உபகரணங்களை கூடுதலாகக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த சோதனை நடவடிக்கைகளை மேலும் அதிகரிப்பதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

வீதி விபத்துக்களை தவிர்க்கும் நோக்கத்தில் மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள் தொடர்பான சுற்றிவளைப்புக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்போது மதுபானம் அருந்தியுள்ள சாரதிகளை அடையாளம் காண்பதற்காகப் பயன்படுத்தப்படும் உபகரணங்களும் போதுமான அளவு நாட்டில் உள்ளன.

இதற்கமைய வருடத்துக்கு ஒரு இலட்சம் பேர் வரை மது போதையில் வாகனம் செலுத்திய தாகைதது செய்யப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், போதைப்பொருள்களைப் பயன்படுத்திவிட்டு வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில், அமைச்சர் சரத் வீரசேகரவின் தலைமையில் விஷேட கலந்துரையாடல் இடம்பெற்றிருந்ததுடன், இதன்போது அமைச்சர் அதற்கான அவசியம் தொடர்பில் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை போதைப்பொருள்களைப் பயன்படுத்திய நபர்களை அடையாளம் காண்பதற்காக வெளிநாடுகளில் பயன்படுத்தப்படும் உபகரணங்களை அதிகளவில் நாட்டுக்கு கொண்டுவந்து, அது தொடர்பான சுற்றிவளைப்புக்களை அதிகரிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

நாடளாவிய ரீதியில் இந்தச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், போதைப்பொருள்களைப் பயன்படுத்தி வாகனங்களை செலுத்தும் சாரதிகள் அடையாளம் காணப்பட்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இதன்போது அவர்களிடமிருந்து 25 ஆயிரம் ரூபாய் பணத்தொகையை அபராதமாக அறவிட முடியும். இதே வேளை அவர்களது சாரதி அனுமதிப்பத்திரதர்தை செயலிழக்கச் செய்யவோ, இரத்துச் செய்யவோ நீதி மன்றத்துக்கு அனுமதியுள்ள தாகவும் அவர் கூறினார். (எ)

## அல்வாயில் குடும்பத்தலைவர் படுகொலை: நால்வர் கைது, இருவரை தேட வலைவீச்சு

யாழ்ப்பாணம்,ஏப்.23

பருத்தித்துறை அல்வாய் பகுதியில் குடும்பத் தகராறு காரணமாக இடம்பெற்ற மோதலில் குடும்பத்தலைவர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்த நிலையில் இருதரப்பிலும் நால்வர் கைது செய்யப்பட்டதுடன் மேலும் இருவர் தேடப்பட்டு வருகின்றனர்.

இவர்களில் இருவர் மீது கொலைக் குற்றச்சாட்டு முன்வைக்கப்படவுள்ளது.

அல்வாயில் இரு பகுதியினருக்கு இடையேஇடம்பெற்ற மோதலில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான முருகராசா கௌசிகன் (வயது -31) என்பவர் வாள்வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

அல்வாய் வடக்கு முத்துமாரி அம்மன் கோவிலடியில் உறவினர்களுக்கு இடையில் பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்னை வாய்த் தர்க்கமாக ஆரம்பித்து வாள் வெட்டில் முடிந்தது.

இச்சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 6 பேர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர்.

சிகிச்சை பெற்றவர்களில் இருவர் வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியதாகவும் மேலும் இருவர் கொல்லப்பட்டவருடன் மோதலில் ஈடுபட்டவர்கள் எனவும் பருத்தித்துறை பொலிஸாரால் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டனர். மேலும் இருவர் தலைமறைவாகியுள்ள நிலையில் தேடப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## பாராளுமன்ற அமைதியின்மை குறித்து விசாரிப்பதற்கு விஷேட குழு நியமனம்

கொழும்பு,ஏப்.23

பாராளுமன்றத்தில் ஏற்பட்ட அமைதியின்மை குறித்து விசாரணை செய்வதற்காக விஷேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் அமைதியின்மை ஏற்பட்டிருந்ததுடன், சபை அமர்வும் ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையிலேயே இதுகுறித்து விசாரணை செய்ய 7 பேர் கொண்ட விஷேட குழு நியமிக்கப்பட்டுள்ளது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்றுக்காலை அறிவித்துள்ளார். (எ)

## குருநாகலில் கொரோனா தொற்றாளர் அதிகரிப்பு

குருநாகல்,ஏப்.23

குருநாகல் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

நாட்டில் நேற்று முன்தினம் 578 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

இதில் குருநாகல் மாவட்டத்திலிருந்து அதிகபட்சமாக 171 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

அத்துடன், புத்தளத்தில் 51 கொரோனா தொற்றாளர்களும், கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலிருந்து தலா 43 கொரோனா தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டனர்.

தற்போது, இலங்கையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 98 ஆயிரத்து 50 ஆக காணப்படுகின்றது.

இவர்களில் 93 ஆயிரத்து 668 பேர் சிகிச்சைகளின் பின்னர் மருத்துவமனைகளிலிருந்து வெளியேறியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட 3 ஆயிரத்து 752 பேர் தொடர்ந்தும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ)

## எதிர்வரும் 3 வாரங்கள் மிகவும் ஆபத்தானவை

### இராணுவத் தளபதி எச்சரிக்கை

கொழும்பு,ஏப்.23

எதிர்வரும் மூன்று வாரங்கள் மிகவும் ஆபத்தானவை என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா எச்சரித்துள்ளார்.

புத்தாண்டு காலப்பகுதியில் மக்களின் நடமாட்டம் அதிகரித்தமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய சூழலில் மக்கள் வீட்டை விட்டு வெளியேறும் போது மக்கள் முகக்கவசம் அணிவது மிகவும் அவசியமானது என வும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், வார இறுதி நாள்களில் பொதுமக்கள் அதிகம் ஒன்று கூடுவதைத் தவிர்ப்பது மிகவும் அவசியமானது எனவும் இராணுவத்தளபதி தெரிவித்துள்ளார். (எ)

## தோட்ட வைத்தியசாலைகள் அரசின் கீழ் கொண்டுவரப்படும்

### சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.23



தோட்ட வைத்தியசாலைகளின் தேவைக்கேற்ப படிப்படியாக அரசாங்கத்தின் கீழ் கொண்டுவரப்படும் எனவும், அரச வைத்தியசாலைகளுக்கு அண்மையிலுள்ள தோட்ட வைத்தியசாலைகள் அரசாங்கத்தின் கீழ் கொண்டுவரப்படத் தேவையில்லை எனவும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வாய்மூல விடைகளுக்கான வினாக்கள் நேரத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமாரின் கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாட்டில் தற்போது 494 தோட்ட வைத்தியசாலைகள் காணப்படுவதாகவும், இதில் 44 தோட்ட வைத்தியசாலைகள் அரசாங்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், இந்தத் தோட்ட வைத்தியசாலைகள் கண்டி, நுவரெலிய, பதுளை, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் காணப்படுகின்றன.

தோட்ட வைத்தியசாலைகளுக்கு அண்மித்த பகுதிகளில் அரச வைத்தியசாலைகள் காணப்படுமாக இருந்தால், தோட்ட வைத்தியசாலைகளை அரசாங்கத்தின் கீழ் கொண்டுவரத் தேவையில்லை. தேவைக்கு ஏற்ப படிப்படியாக அரசாங்கத்தின் கீழ் தோட்ட வைத்தியசாலைகளை கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. தோட்ட வைத்தியசாலைகளுக்கு முக்கியத்துவமளித்து செய்யக்கூடிய அனைத்து சுகாதார வேலைத்திட்டங்களையும் அரசாங்கம் முன்னெடுக்கும் எனவும் உறுதியளித்த சுகாதார அமைச்சர், நாட்டில் வைத்தியர்களுக்கான பற்றாக்குறை இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாகிஸ்தான் விடுதியில் தற்கொலை தாக்குதல்!

### நால்வர் உயிரிழப்பு

*இஸ்லாமாபாத், ஏப். 23*

பாகிஸ்தானில் நட்சத்தில் விடுதி ஒன்றில் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலை தாக்குதலில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உட்பட நால்வர் உயிரிழந்தனர்.

அந்த நாட்டின் பலுகிஸ்தான் மாகாணத்தின் தலைநகர் குவெட்டாவிலுள்ள செரீனா நட்சத்திர விடுதியிலேயே இந்தத் தாக்குதல் நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்டது.

அன்றிரவு இந்த விடுதியில் சீனத் தூதுவர் நோங் ரோங் சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார். இந்தச் சந்திப்பு முடிந்து அவர் வெளியேறிய சில நிமிடங்களிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலுக்கு தலிபான்கள் உரிமை கோரியுள்ளனர். (ஐ)

## மூன்று மரபு கலப்பு கொண்ட ‘வங்காள திரிபு’ இந்தியாவில்!



*மும்பை, ஏப். 23*

மேற்கு வங்க மாநிலத்தில் புதிய “முத்திரிபு” (triple-mutation) வைரஸ் கிருமி ஒன்றைத் தாங்கள் அடையாளம் கண்டுள்ளனர் என்ற தகவலை அங்குள்ள நோய் ஆய்வு நிபுணர்கள் வெளியிட்டுள்ளனர்.

கடந்த ஒக்ரோபரில் மகாராஷ்டிராவில் பரவத் தொடங்கிய இரட்டைத் திரிபு வைரஸ் இந்தியாவின் தொற்றாளர் எண்ணிக்கையைச் சமீப நாட்களாக உலக சாதனை அளவுக்கு உயர்த்திவிட்டுள்ளது. இதனால், நாட்டின் சுகாதாரக் கட்டமைப்புகள் ஸ்தம்பித நிலையை எட்டியுள்ளன. இந்தக் கட்டத்தில் மூன்று திரிபுகளின் கலவையாக - மூன்று வித மரபுத் தன்மையை ஓர் உடலில் கொண்ட ‘முத்திரிபு’ வைரஸ் பற்றிய செய்தி வெளியாகியிருக்கிறது.

அதி வேகமாகப் பரவுதல், உடலின் நோய் எதிர்ப்பு சக்தியிடம் இருந்து தப்புதல் போன்ற தன்மைகளைக் கொண்ட இந்த வைரஸை “வங்காளத் திரிபு” (Bengal strain) என்று அழைக்கின்றனர்.

இங்கிலாந்து - பிரேஸில் - தென்னாபிரிக்கா போன்ற மூன்று திரிபுகளினதும் கூட்டு வடிவமாகச் சந்தேகிக்கப்படும் முத்திரிபு, ஏற்கனவே வைரஸ் தொற்றியவர்களுக்கும் தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர்களுக்கும் மறுபடியும் தொற்றக் கூடிய வலிமை கொண்டதா என்ற அச்சம் இந்திய நோயியல் நிபுணர்களிடையே எழுந்துள்ளது.

எனினும், இந்த அச்சத்தை நிரூபிப்பதற்கான ஆய்வுகள் முற்றுப் பெறவில்லை. முத்திரிபு வைரஸின் மரபு வரிசை பற்றிய ஆராய்ச்சிகள் இனி மேல்தான் நடைபெறவுள்ளன. (ஐ)

## 53 பேருடன் பயணித்த நீர்மூழ்கி கப்பல் மாயம்!

*ஜகார்த்தா, ஏப். 23*

இந்தோனேசியாவில் 53 பேருடன் சென்ற கடற்படைக்கு சொந்தமான நீர்மூழ்கி கப்பல் மாயமாகியுள்ளது. இந்தோனேசிய கடற்படைக்கு சொந்தமான கே.ஆர்.ஐ. நங்கலா-402 ரக நீர்மூழ்கி கப்பலே இவ்வாறு மாயமானது.

இது, பாலி தீவு அருகே ஜாவா கடலில் நேற்றுமுன்தினம் பயி பயிற்சியில் ஈடுபட்டிருந்தது. அதில், கடற்படையினர், மாலுமிகள் உட்பட மொத்தம் 53 பேர் பயணித்தனர்.

95 கி.மீற்றர் தொலைவில் சென்ற இந்தக் கப்பல் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது.

இதையடுத்து இந்தோனேசிய கடற்படையினர் நீர்மூழ்கிக் கப்பல் கடைசியாக தொடர்பில் இருந்த கடற்பரப்பில் தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அத்துடன், இந்த நீர்மூழ்கி கப்பலை தேடும் பணியில் அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், இந்தியாஆகிய நாடுகளிடம் இந்தோனேசியா உதவி கோரியுள்ளது. (ஐ)

## இந்தியாவில் ஒருநாளில் தொற்று 300,000 கடந்தது; பலியும் உச்சம்!

### பராமரிப்பு திறனை இழந்தன மருத்துவமனைகள்

*புதுடில்லி, ஏப். 23*

இந்தியாவில் மிக உச்சமாக நேற்று ஒரேநாளில் 3 இலட்சத்துக்கும் அதிகமான தொற்றாளர்கள் உறுதி செய்யப்பட்டனர். அத்துடன், 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட கொரோனா மரணங்களும் பதிவாகின.

நேற்று காலை 6 மணிவரையான காலப்பகுதியில் 3 இலட்சத்து 14 ஆயிரத்து 835 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. அத்துடன், 2,104 கொரோனா மரணங்கள் அறிவிக்கப்பட்டன. புதிய தொற்று நோயாளர்களுடன் இந்தியாவில் இதுவரை பதிவான மொத்த கொரோனா தொற்று நோயாளர் தொகை 1 கோடியே 59 இலட்சத்து 30 ஆயிரத்து 965 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனா பலியெடுத்தவர்களின் மொத்த எண்ணிக்கையும் இதுவரை 1 இலட்சத்து 84 ஆயிரத்து 657- ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்று நோயாளர் தொகை உச்ச அளவில் அதிகரித்து வருவதால் தலைநகர் புதுடெல்லி உட்பட வடக்கு மற்றும் மேற்கு இந்தியா முழுவதும் மருத்துவமனைகள் பராமரிப்புத் திறனை இழந்து உச்சக்கட்ட நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றன. பெரும்பாலான மருத்துவமனைகள் நிரம்பியுள்ளன. ஒட்சிசன் இல்லாமல் நோயாளர்கள் உயிரிழந்து வருகின்றனர். மருத்துவமனைகளில் இடம் இல்லாததால் நோயாளர்களை வீடுகளிலேயே தனிமையில் இருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இறந்தவர்களை தகனம் செய்வதிலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதால் பல இடங்களில் மயானங்கள் முன்பாக இறந்தவர்களின் சடலங்களுடன் உறவினர்கள் பல மணி நேரம் நீண்ட வரிசையில் காத்திருக்கும் அவல நிலையும் தொடர்ந்து பதிவாகி வருகிறது. (ஐ)

## விண்வெளி ஆய்வு மையத்தை தனியாக நிறுவ ரஷ்யா முடிவு!

*மொஸ்கோ, ஏப். 23*

தற்போது பூமிக்கு மேல் சுழலும் சர்வதேச விண்வெளி ஆய்வுமையம் கடந்த 1998-ம் ஆண்டு ரஷ்யா, அமெரிக்காவின் கூட்டு முயற்சியில் அமைக்கப்பட்டது. இதன் பின்னர் ஜப்பான், கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் விண்வெளி ஆய்வு நிறுவனங்களும் இதில் கைகோத்தன.

தற்போது, இந்த நாடுகளை சேர்ந்த விண்வெளி வீரர்கள் சுழற்சி முறையில் தங்கியிருந்து ஆய்வுப் பணிகளை செய்கின்றனர். இந்நிலையில், பல்வேறு விவகாரங்களில் மேற்கத்தேய நாடுகளுடன் பதற்றம் நீடித்து வரும் சூழலில் தனக்கென சொந்தமாக விண்வெளி ஆய்வு மையத்தை அமைக்க ரஷ்யா முடிவு செய்துள்ளது.

சர்வதேச விண்வெளி ஆய்வு மையம் தொடர்பாக பிற நாடுகளுடன் ரஷ்யா மேற்கொண்டுள்ள ஒப்பந்தம் வருகிற 2024 ஆம் ஆண்டுடன் முடிவடைகிறது. இந்த சூழலிலேயே 2025 ஆம் ஆண்டுக்குள் சொந்தமாக விண்வெளி ஆய்வு மையத்தை அமைக்க முடிவு செய்திருப்பதாக ரஷ்யாவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான ரோஸ்காஸ் மோஸ் தெரிவித்தது.

இதேநேரம், சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து வெளியேறுவது குறித்து இன்னமும் முடிவு செய்யவில்லை என்றும், சக நாடுகளுடனான பேச்சு தொடங்கும்போது இந்த விடயத்தில் முடிவு எடுக்கப்படும் எனவும் ரோஸ்காஸ்மோஸ் மேலும் கூறியுள்ளது. (ஐ)



## எல்லை கடந்த பாகிஸ்தான் புறா தொடர்பில் விசாரணை!

*அமிர்தசரஸ், ஏப். 23*

பாகிஸ்தானில் இருந்து எல்லை கடந்து இந்தியாவுக்குள் நுழைந்த புறா தொடர்பில் பொலிஸார் முதல் குற்ற அறிக்கை பதிவு செய்து விசாரணை நடத்துகின்றனர்.

எல்லை கடந்து வந்த அந்தப் புறாவின் கால்களில் இரகசிய குறியீட்டுடனான கடிதம் ஒன்று இணைக்கப்பட்டிருந்ததாகத் தெரிய வருகின்றது.

இந்தியாவின் எல்லைக் கிராமமான ரோரன்வாலா என்ற கிராமத்திலேயே இந்தப் புறா கண்டுபிடிக்கப்பட்டது. இந்தப் புறா உளவு பார்ப்பதற்காக பாகிஸ்தான் இராணுவத்தால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர். (ஐ)

## கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்பு ஜேர்மனியில் 150 பேர் கைது!

*பெர்லின், ஏப். 23*

கொரோனா தொற்றை கட்டுப்படுத்த ஜேர்மனியில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு எதிராக போராட்டம் நடத்தியவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஜேர்மனியில் கொரோனா மூன்றாம் அலை தாக்கம் நிலவுகிறது. இதனால், அங்கு தினமும் 20 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் தொற்றுக்குள்ளாகின்றனர். இதனால்,நாடு முழுவதும் ஊரடங்கு உள்ளிட்ட கடும் கட்டுப்பாடுகளை அரசு அறிவித்தது. அரசின் இந்த முயற்சியை 16 மாகாண அரசுகள் எதிர்த்தன. எனினும், பாராளுமன்றில் சட்டமாக இயற்றப்பட்டு இந்தக் கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு வந்தன.

எனினும், இந்த நடைமுறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் போராட்டங்களை நடத்தினர். அவர்கள், அதிகாரத்துக்கு இங்கு இடமில்லை என்று கோஷம் எழுப்பினர். இதையடுத்து, 150 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார் கதவில் பாதுகாப்பின்றி பயணித்தவர்களுக்கு பிணை



கொழும்பு,ஏப்.23

தெற்கு அதிவேக வீதியில் கார் கதவில் (ஜன்னலில்) அமர்ந்து பாது காப்பின்றி பயணித்த குற்றச்சாட்டில்கைது செய்யப்பட்ட சாரதி மற்றும் 4 இளைஞர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பாணந்துறை நீதிவான் நீதிமன்றில் இவர்கள் நேற்று முற்படுத்தப்பட்ட போது இவ்வாறு பிணை வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இதனைத் தெரிவித்தார்.

கடந்த 13 ஆம் திகதி காலை நெடுஞ்சாலை பாதுகாப்புப் பிரிவினரால் குறித்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (எ)

# பாடசாலையை மீண்டும் திறக்கக் கோரி கல்வி திணைக்களம் முன் ஆர்ப்பாட்டம்



கல்குடா,ஏப்.23

கல்குடா கல்வி வலயத்துக்குட்பட்ட ஓமடியாமடு வேழமுகன் வித்தியாலயத்தை மீண்டும் திறக்கக் கோரி நேற்று வியாழக்கிழமை காலை கல்குடா வலயக்கல்விப் பணிமனைக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

சுமார் 38 மாணவர்கள் கல்வி கற்கும் இந்த பாடசாலையில் தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரையான வகுப்புக்கள் உள்ள நிலையில், கடந்த 03 வாரங்களாக இந்த பாடசாலைக்கு அதிபர் நியமிக்கப்படவில்லை. இதனால்கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதமையாலேயே இந்த பாடசாலை மூன்று வாரங்களாக திறக்கப்படாத நிலையில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் மாணவர்களின் கல்வி நடவடிக்கை முற்றாகப் பாதிக்கப்படுவதாக தெரிவித்தே பெற்றோர்கள் மற்றும் மாணவர்களால் இவ் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பிரதமர் மாமா ஏன் சிறுபான்மையர் எமது கல்வி உரிமையைப் பறிக்கின்றீர்கள் மற்றும் ஜனாதிபதி மாமா கல்வி கற்கும் உரிமை எமக்கு இல்லையா? போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை தாங்கியிருந்தனர்.

வலயக் கல்வி அலுவலகத்துக்கு செல்லும்பிரதான பாதையை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து வலயக் கல்வி பணி மனை வரை பேரணியாகச் சென்று வலயக் கல்வி பணிமனை வளா கத்திலும் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து வல யக் கல்விப் பணிமனையின் அதிகாரிகளுடன் கலந்துரையாடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு பிரசன்னமாகியிருந்த பிரதிக் கல்வி பணிப்பாளர் திருமதி.எஸ். கங்கேஸ்வரனால் வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைவாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் அவ்விடத்திலிருந்து கலைந்து சென்றனர். (எ)

# உள்நாட்டு ஆடை உற்பத்தியாளரிடம் சீருடைகள் விநியோகிக்கும் பொறுப்பு

கொழும்பு,ஏப்.23

2022ஆம் ஆண்டுக்கான பாடசாலைச் சீருடைகளை விநியோகிக்கும் பொறுப்பை உள்நாட்டு ஆடை உற்பத்தியாளர்களுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஊக்கு வித்து பாடசாலை சீருடைகளை அவர்களிடமிருந்து கொள்வனவு செய்ய அமைச்சரவை ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி, கைத்தொழில் அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள உள்நாட்டு ஆடை உற்பத்தியாளர்களிடம் அதற்கான விலை மட்டங்களைக் கோரி விநியோகஸ்தர்களை தெரிவு செய்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, அடுத்த வருடத்துக்கான பாடசாலைச் சீருடைகளை இந்த வருட இறுதி பாடசாலைத் தவணைக்கு முன்னர் மாணவர்களுக்கு வழங்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் முன்வைத்த இந்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (எ)

# வவுனியாவில் கஞ்சாவுடன் குடும்பப் பெண் சிக்கினார்

வவுனியா,ஏப்.23

வவுனியா, உக்கிளாங்குளம் பகுதியில் கஞ்சாவுடன் குடும்பப்பெண் ஒருவரை பொலிஸார் நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளனர்.

வவுனியா போதைப்பொருள்ஒழிப்புப்பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து உக்கிளாங்குளம் - கூமாங்குளம் வீதியில் முனியப்பர் கோவிலடிக்கு அண்மையிலுள்ள வீடு ஒன்றில் சோதனை நடத்திய போது மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா கண்டு பிடிக்கப்பட்டது. இதனையடுத்து கஞ்சாவை மீட்ட பொலிஸார், குறித்த குடும்பப் பெண்ணை கைது செய்தனர். இதேவேளை, விசாரணைகளின் பின்னர் குறித்த பெண்ணை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ)



# வவுனியாவில் கடத்தப்பட்ட வாகனம் பொலிஸாரால் மீட்பு; இளைஞன் கைது

வவுனியா,ஏப்.23

வவுனியா, இலுப்பையடிக்கு அண்மித்த குடியிருப்பு பகுதியில் வைத்து கடத்தப்பட்ட சிறிய ரக வாகனம் வவுனியா பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன், இந்தச் சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

வவுனியாவிலுள்ள வர்த்தக நிலையங்களுக்குப் பொருள்களை விநியோகம் செய்யும் சிறிய ரக வாகனம் ஒன்றை நிறுத்தி விட்டு பொருள்களை விநியோகம் செய்து கொண்டிருந்த போது அங்கு வந்த நபர் ஒருவர் இயங்கு நிலையில் இருந்த குறித்த வாகனத்தை எடுத்துக்கொண்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளார்.

இதனையடுத்து விநியோகஸ்தர்களால் வவுனியா குற்றத்தடுப்புப்பிரிவு பொலிஸாரிடம்முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் அவர்கள் தீவிர விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

இந்நிலையில், அங்கிருந்து வாகனத்தை எடுத்துச் சென்ற நபர் வவுனியா, மன்னார் வீதி வழியாக குருமன்காடு பகுதியில் பயணித்த போது மோட்டர்சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற போக்குவரத்து பொலிஸார் மோட்டர் சைக்கிளில் பயணித்த நிலையில் காயமடைந்தவரை, வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்ததுடன், குறித்த வாகனத்தையும் அதனை செலுத்தி வந்த சாரதியையும் கைது செய்து வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

இதன்போது குறித்த வாகனமே கடத்தப்பட்டதாக குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டதையடுத்து, குறித்த வாகனம் மீட்கப்பட்டுள்ளதுடன், அதனை கடத்தியதாக சந்தேகத்தின் பேரில் புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய இளைஞர் ஒருவரையும் வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தக் கடத்தல் மற்றும் விபத்து சம்பவங்கள் தொடர்பில் வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரும், போக்குவரத்து பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ)



# மக்கள் வங்கியின் ஆண்டறிக்கை பிரதமர் மஹிந்தவிடம் கையளிப்பு

கொழும்பு,ஏப்.23

மக்கள் வங்கியின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷவால் அலரிமாளிகையில் வைத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் நேற்று முற்பகல் கையளிக்கப்பட்டது.

இந்த ஆண்டறிக்கையின்படி, மக்கள் வங்கியின் வரிக்கு முந்தைய இலாபம் ரூபாய் 21 பில்லியனும், வரிக்குப் பிந்தைய இலாபம் ரூபாய் 14 பில்லியனும் ஆகும்.

2020 ஆம் ஆண்டுக்கான மக்கள் வங்கியின் பங்கு இலாபம் ரூபாய் 3.5 பில்லியன் எனவும், அரச வரி ரூபாய் 14 பில்லியன் ரூபாய் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச நிதிக் கொள்கையைப் பின்பற்றி மக்கள் வங்கி இந்த ஆண்டில் 25 பில்லியன் ரூபாய் இலாபம் மற்றும் ரூபாய் 15 பில்லியனுக்கும் அதிகமான வரி வருவாயை எதிர்பார்ப்பதுடன், எதிர்பார்க்கும் பங்கு இலாபம் 3 பில்லியனாகும்.

இந்த அறிக்கை கையளிப்பு நிகழ்வில் மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரஞ்சித் கொடித்துவக்கு, நிதி அதிகாரி அசாம் அஹமட் மற்றும் விநியோக நிறைவேற்று அதிகாரி நாலக விஜேவர்த்தன ஆகியோர் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மை இனத்தவர்களை இலக்கு வைப்பதற்காக பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தக்கூடாது

## இலங்கைக்கு சர்வதேச மன்னிப்புச் சபை இடித்துரைப்பு

கொழும்பு,ஏப்.23

**உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுத்து, குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது. எனினும், சிறுபான்மை இனத்தவர்களை இலக்கு வைத்து நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு மிகவும் மோசமான பயங்கரவாதத் தடைச்சட்டம் பயன்படுத்தப்படக்கூடாது என்று இலங்கை அரசாங்கத்துக்கு சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.**

உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல்கள் இடம்பெற்று இரண்டு வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில், அதனை முன்னிட்டு சர்வதேச மன்னிப்புச் சபையால் அதன் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்பதிவில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் சுமார் 250 இற்கும் அதிகமானோரைக் காவு கொண்ட ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல்கள் இடம்பெற்று இருவருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன. இந்தக் குண்டுத்தாக்குதல்களில் தமது அன்பிற்குரியவர்களை இழந்தவர்களுக்கு எமது இரங்கலைத் தெரிவிக்கின்றோம்.

அதேவேளை, எந்தவொரு சமூகத்தையும் அடக்குமுறைக்கு உட்படுத்தக்கூடிய வெறுப்புணர்வுக்கு எதிராக ஒன்றுபட வேண்டும்.

இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுப்பதுடன் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது. இவ் விசாரணை சர்வதேச தரத்துக்கு அமைவாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதேவேளை, விமர்சகர்களையும் சிறுபான்மையினரையும் இலக்குவைத்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் எவ்வித விசாரணைகளுமின்றி அவர்களைத் தன்னிச்சையாகத் தடுத்து வைப்பதற்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற மிகவும் மோசமான சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்தக்கூடாது.

அதனை மறுபரிசீலனை செய்வதற்கும் முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் இலங்கை அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது. (எ)

## மரண அறிவித்தல்

மலர்வு 12 - 07 - 1935



உதிர்வு 21 - 04 - 2021

### திரு.முருகேசு நாகரத்தினம்

யாழ். வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், மண்கும்பான் மேற்கை வதிவிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு நாகரத்தினம் அவர்கள் 21-04-2021 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான முருகேசு செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், கமலாம்பிகை அவர்களின் பாசமிகு கணவரும், தவலெச்சுமி (தவம்), தவயோகன் (மணி), தவமலர் (மலர்), தவராஜா (சிவா), விக்னேஸ்வரன் (ஈசன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், சிவலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, ராஜேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, பாலசிங்கம், சின்னம்மா, கருணைநாயகி, திருநாவுக்கரசு, பூவதி, குலசேகரம்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும், சதாசிவம், ராசமலர் (பேபி), ஞானேஸ்வரன், லதாரூபி (லதா), ஜெயவதனா (வதனா) ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்ஷினி- பிரேம், சரஞ்சன், அபிராம், சுஜித்தா, நிஜித்தா, மயூரன், தனுஷா- சஞ்சயன், தர்மிளா- பிராசாந், பவிஷா, தீபனா, கரிஷ், ரதிசன், விதுஜா ஆகியோரின் பாசமிகு பேரனும், பிரணவ், சயானா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: **குடும்பத்தினர்.**

**பார்வைக்கு**
Saturday, 24 Apr 2021 3:00 PM - 5:00 PM
Sunday, 25 Apr 2021 12:00 PM - 2:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

**தகனம்**
Sunday, 25 Apr 2021 2:30 PM
Highland Hills Funeral Home and Cemetery
12492 Woodbine Ave, Gormley, ON L0H 1G0, Canada

**தொடர்புகளுக்கு:**
**கமலாம்பிகை (மனைவி) - 0014163633993**
**தவம் (மகள்) - 0014167464099**
**மணி (மகன்) - 0014163009390**
**மலர் (மகள்) - 0019059150330**
**சிவா (மகன்) - 0014164736155**
**ஈசன் (மகன்) - 0014162779826**

# அரச நிறுவனங்களில் வினைத்திறனை மேம்படுத்த கண்காணிப்பு மிகஅவசியம்

கொழும்பு,ஏப்.23

பொதுமக்களுக்கு சேவை வழங்கும் அரச நிறுவனங்களின் மூலம் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்துகொள்ள முடியாது என்ற குற்றச்சாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

கொரோனா தொற்று காலத்திலும்கூட 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்ட பல்வேறு விடயங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மக்களிடம் காணப்படும் மனக் குறைக்கு காரணம் சில அரச நிறுவனங்களில் நிலவுகின்ற செயல்திறனற்ற சேவை, ஊழல், தாமதம் போன்றவையாகும் என்று மக்கள் குறிப்பிடுகின்றனர். செயல்திறன்மிக்க அரச சேவைக்காக இராஜாங்க அமைச்சர்களின் நேரடி தலையீடு மற்றும் தொழில்நுட்ப பயன்பாட்டின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியுமென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இராஜாங்க அமைச்சர்களுடன் மாதாந்தம் இடம்பெறும் மீளாய்வுக் கூட்டம் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சில நிறுவனங்களின் தலைவர்கள் தமது பணிகளை உரியவாறு நிறைவேற்றாமை தொடர்பாகவும் அறியக்கிடைத்துள்ளது. அரசாங்கம் எதிர்பார்க்கும் இலக்கை நோக்கிச் செல்லாத அவ்வாறான நிறுவனங்கள் தொடர்பாக அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு இராஜாங்க அமைச்சர்களுக்குப் பணிப்புரைவிடுத்த ஜனாதிபதி, அந்நிறுவனங்களுக்கு வேறு அதிகாரிகளை நியமிக்க வேண்டுமெனில் அதற்கும் தான் தயாரென்றும் குறிப்பிட்டார்.



வெளிநாட்டுக் கடன் மற்றும் உள்நாட்டு வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களின் முன்னேற்றத்தை அவதானித்து துரிதப்படுத்துவதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

'மக்களுடனேயே எமது பலம் இருக்கிறது. அவர்களின் தேவைகளை உடனடியாக நிறைவு செய்ய வேண்டும். பிரச்னைகளை காது கொடுத்து கேட்பதுடன், மக்களிடமிருந்து தூர விலகி நிற்காமல் செயல்படுங்கள்' என்று ஜனாதிபதி இராஜாங்க அமைச்சர்களிடம் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் கொள்கை தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்துவதாகும். அதனால் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை கிராமத்துக்குள் உருவாக்கி தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்துவது தொடர்பாகவும் ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

உற்சவ காலங்களில் அத்தியாவசியப்பொருள்களின்விலை உயர்வடைவது சாதாரணமானது. அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதியால் விவசாயிகளின் விளைச்சலை விற்பனை செய்வதற்கு முடியாதுள்ளது.

அந்த நிலைமையை மாற்றியமைத்து இம் முறை புதுவருட காலத்தில் அத்தியாவசிய பொருள்களின் விலையை கீழ் மட்டத்தில் பேணுவதற்கும் விவசாயிகளின் விளைச்சலை கொள்வனவு செய்வதற்கும் முதல் முறையாக அரசாங்கத்திற்கு முடியுமாக இருந்ததென சுட்டிக்காட்டிய பொருளாதார புத்தெழுச்சி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ 5,000 ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கு அரச அதிகாரிகள் வழங்கிய ஒத்துழைப்பையும் அர்ப்பணிப்பையும் பாராட்டினார்.

இராஜாங்க அமைச்சர்கள், ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல, பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

இலங்கைக்கு எதிரான டெஸ்ட்:

# வலுவான நிலையில் பங்களாதேஷ் அணி!

கண்டி, ஏப். 23

இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இரண்டாம் நாள் ஆட்டம் முடிவில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 474 ஓட்டங்களை குவித்து வலுவான நிலையில் உள்ளது பங்களாதேஷ் அணி.

இலங்கை வந்துள்ள பங்களாதேஷ் அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது. இதில் முதல் போட்டி கண்டியில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வருகின்றது.

முதல்நாள் ஆட்டம் முடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 302 ஓட்டங்களை எடுத்திருந்தது. இந்நிலையில் இரண்டாம் நாள் ஆட்டம் நேற்று ஆரம்பமானது.

சாண்டோ 126 ஓட்டங்களுடனும், மொமினுல் ஹகியூ 64 ஆட்டங்களுடனும் தொடர்ந்து துடுப்பெடுத்தாடினர். இருவரும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ஹகியூ தனது 11ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்து தனது அபாரமான ஆட்டத்தைத் தொடர்ந்தார்.

150 ஓட்டங்களைக் கடந்த சாண்டோ, 378 பந்துகளை எதிர்கொண்டு, 17 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 163 ஓட்டங்களை எடுத்து குமாரவின் பந்தில் அவரிடமே பிடி கொடுத்து வெளியேறினார். அடுத்து வந்த முஸ்பிஹர் ரகீமும் நிலைத்து ஆடினார். இதனால், 400 ஓட்டங்களைக் கடந்தது பங்களாதேஷ் அணி.


304 பந்துகளில் 11 பௌண்ட்ரிகளை அடித்த ஹகியூ 127 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

நேற்றைய நாள் ஆட்டம் முடிவில் 155 ஓவர்களுக்கு 4 விக்கெட்களை இழந்து 474 ஓட்டங்களை எடுத்திருந்தது.

முஸ்பிஹர் ரகீம் 43 ஓட்டங்களுடனும், லிதன் டாஸ் 25 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இலங்கையின் பந்துவீச்சில் விஸ்வ பெர்னாண்டோ 2 விக்கெட்களையும், லஹிரு குமார, தனஞ்சய டிசில்வா ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்களையும் வீழ்த்தினர்.

(ஐ)



# படிக்கல் அதிரடிச் சதம்: பெங்களூர் அபார வெற்றி!

மும்பை, ஏப். 23

தேவ்தத் படிக்கல்லின் அதிரடி சதமும், விராட் கோலியின் மிரட்டல் ஆட்டமும் கைகொடுக்க ராஜஸ்தான் அணியை 10 விக்கெட்களால் அபார வெற்றி கொண்டது பெங்களூர் அணி.

இந்த வெற்றியால் தொடர்ச்சியாக 4ஆவது போட்டியிலும் வெற்றிபெற்று சென்னையிடம் பறிகொடுத்த முதலிடத்தைப் பிடித்தது பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்.

ஐ.பி.எல். இருபது - 20 தொடரில் நேற்றிரவு நடந்த போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூரின் அணித் தலைவர் கோலி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார். இதனால், ராஜஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஜோஸ் பட்லர், மனன் வோக்ரா இணை தொடக்கம் கொடுத்தது. இந்த இணை அதிக நேரம் நீடிக்கவில்லை. பட்லர் 8, வோக்ரா 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

அடுத்து சஞ்சு சாம்சனுடன் இணைந்த டேவிட் மில்லர் ஓட்டம் எதனையும் பெறாமலே ஆட்டமிழந்தார். ஆனால், அடுத்து களம் புகுந்தி சிவம் துபே பொறுப்புணர்ந்து ஆடினார். இருவரும் ஓரளவுக்கு அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்திய நிலையில் 21 ஓட்டங்களுடன் சாம்சன் ஆட்டமிழந்தார். துபேயுடன் இணைந்த றியான் பராக் 16 பந்துகளில் 4 பௌண்ட்ரிகளை அடித்து 25 ஓட்டங்களைப் பெற்று வெளியேறினார்.

அவரைத் தொடர்ந்து சிவம் துபே 5 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 46 ஓட்டங்களைக் குவித்து றிச்சர்ட்சனின் பந்தில் மக்ஸ்வெல்லிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

அடுத்துவந்த ராகுல் தெவாட்டியா 4 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களை விரட்டி 40 ஓட்டங்களை எடுத்தார். இதனால், 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்கள் இழப்புக்கு ராஜஸ்தான் அணி 177 ஓட்டங்களை எடுத்தது.

பெங்களூரின் பந்து வீச்சில் முஹமது சிராஜ், ஹர்சல் பட்டேல் தலா 3 விக்கெட்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 177 என்ற இலக்கைத் துரத்தியது பெங்களூர் அணி. விராட் கோலி, தேவ்தத் படிக்கல் இணை தொடக்கம் கொடுத்தது. 27 பந்துகளில் அரைச்சதத்தை தொட்டார் படிக்கல். முதலில் நிதானம் காட்டிய கோலி, பின்னர் பௌண்ட்ரிகளுக்கு பந்துகளை தொடர்ச்சியாக விரட்டினார். இதனால், 24 பந்துகளில் 26 ஓட்டங்களை எடுத்திருந்த அவர் 34 பந்துகளில் அரைச் சதம் கடந்தார்.

தொடர்ந்து, 51 பந்துகளில் 11 பௌண்ட்ரிகள், 6 சிக்ஸர்களை பறக்கவிட்ட படிக்கல் சதம் கடந்தார்.

இதனால், பெங்களூர் அணி விக்கெட் இழப்பு எதுவுமின்றி 16.3 ஓவர்களில் 181 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இறுதிவரை ஆட்டமிழக்காமல் படிக்கல் 52 பந்துகளில் 101 ஓட்டங்களையும், கோலி 47 பந்துகளில் 72 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இந்த வெற்றியின் மூலம் சென்னையிடம் பறி கொடுத்த முதலிடத்தை மீண்டும் பிடித்தது பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்.





ஆட்டநாயகனாக சதம் அடித்து அசத்திய தேவ்தத் படிக்கல் தெரிவானார். (ஐ)

# ஐரோப்பிய சுப்பர் லீக்: திட்டப்படி நடக்காது

## 6 கழகங்கள் விலகின

லண்டன், ஏப். 23

ஐரோப்பிய சுப்பர் லீக்கிலிருந்து 6 முன்னணி பிறிமியர் லீக் கழகங்கள் விலகியமையால் லீக் தொடரை திட்டமிட்டபடி நடத்த முடியாது என்று ஐரோப்பிய சுப்பர் லீக் நிறுவனரும், ஜூவென்டஸ் கழகத்தின் தலைவருமான ஆண்ட்ரியா அக்னெல்லி புதன்கிழமை தெரிவித்துள்ளார்.

மேலும், ஐரோப்பிய லீக்கின் தற்போதைய நிலைக்கு அரசியல்வாதிகளின் தலையீடு காரணம் என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

இங்கிலாந்து, இத்தாலி மற்றும் ஸ்பெயினில் இருந்து ஐரோப்பாவின் முன்னணி உதைபந்தாட்ட கழகங்களில் 12 ஞாயிற்றுக்கிழமை லீக்கிலிருந்து வெளியேறுவதாக அறிவித்தன.

ஆனால், ரசிகர்கள் மற்றும் அரசியல்வாதிகளிடமிருந்து 48 மணிநேர கடுமையான விமர்சனங்களுக்குப் பிறகு 6 கழகங்கள் செவ்வாயன்று தொடலிருந்து விலகின.

மன்செஸ்டர் யுனைடெட், லிவர்பூல், ஆர்செனல், டோட்டன்ஹாம் ஹொட்ஸ்பர், செல்சியா மற்றும் மன்செஸ்டர் சிற்றி ஆகிய 6 கழகங்களே இவ்வாறு விலகின.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. F.X. அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
12.30 மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-
திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10



**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்-
உடற்பயிற்சி-பகுதி-02



10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில்
கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி
வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 : மணி சிவாய மந்திரம்
6.00 : மணி சுப்ரபாதம்
6.30 : மணி சுப்ரபாதம்
07.00 : மணி இன்றைய சிந்தனை
07.05 : மணி இன்றைய நாள்
07.30 : மணி மங்கள இசை
08.00 : மணி அருளுரை
08.30 : மணி திருவாசகம்
09.00 : மணி திருவிழா-01
10.00 : மணி ஐயப்பன் பாடல்கள்
10.30 : மணி பஜனை
11.00 : மணி பக்திமலர்

**பகல்**
12.00 : மணி திரையில் பக்தி
12.30 : மணி திருவிழா-02
6.00 : மணி கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00: மணி செய்திகள்
7.30: மணி அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித வேளாங்கன்னி மாதா மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : பாடல்
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
3.00 மணி : பாடல்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org